உ
குருபாதம்
ஞானசம்பந்தம்
மலர் 37 | காளயுக்தி - ஆடி - 10—8—78 | இதழ் 9

திருச்சிற்றம்பலம்

பொன்தயங் கிலங்கொளிந் நலங்குளிர்ந்த புன்சடை
பின்தயங்க ஆடுவாய்! பிஞ்ஞகா! பிறப்பிலீ!
கொன்றையம் முடியினாய்! கூடலால வாயிலாய்!
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே. சம்பந்தர்.

திருச்சிற்றம்பலம்

ஜனாதிபதியின் தத்துவம்

சமயமும் சமூகமும் :

உலகத்தின் ஆன்மீகத் தொட்டிலாக விளங்கும் பெருமை நம் பாரத நாட்டிற்கே உரியது. இம்மண்ணில் உதித்த பேரருளாளர்களும் அவர்களால் அருளிச்செய்யப்பெற்ற ஞானநூல்களும் பாரதநாட்டின் பத்தி மிக்க பண்பாட்டுச் சிறப்புக்கு அழியாச் சான்றுகளாகத் திகழ்வன. சமயம் வேறு சமூகம் வேறு என்பதுபோலப் பிரித்து ஆராயப் பட்டாலும் இந்தியநாட்டைப்பொறுத்தவரை சமயநெறிகளைப் பிரித்து விட்டுச் சமுதாய வாழ்வை ஆராய்வது என்பது இயலாத ஒன்றே. ஒருகாலத்தில் சமூகம் - சமயத்தை வடிவமைத்து வளர்த்தது உண்மையே என்றாலும், வரலாற்று எல்லைக்குட்பட்ட தொன்னெடுங் காலமாக, சமயமே சமுதாயத்தைப் பின்னணியாகநின்று இயக்கி வந்திருப்பதை எளிதில் உணரமுடிகிறது.

ஜனாதிபதி பேச்சு :

இந்தியநாட்டின் குடியரசுத்தலைவர், மாண்புமிகு. திரு. நீலம் சஞ்சீவ ரெட்டி அவர்கள் அண்மையில் விசாகப்பட்டிணத்தில் பேசிய தாக நாளிதழ்களில் வந்த ஒரு செய்தி மேற்கண்ட கருத்துக்கு அரண்

செய்வதாக அமைகிறது. இவ்விதழில் அச்செய்தி தனியே வெளியிடப்பெற்றிருக்கிறது. சமய ஈடுபாடுகொண்ட நம் குடியரசுத் தலைவர் அவர்கள் சமய - சாத்திர நுட்பங்களைத் தெரிந்து ஆய்ந்தோ, அல்லது மேலெழுந்தவாரியான ஒப்புமைகருதியோ, இந்தியநாட்டின் அரசியல் அமைப்பில் 'ஜனாதிபதி' யின் இடம் இன்னது என்பதை மிக அழகாக விளக்கியுள்ளார்.

> **" இந்தியாவின் ராஷ்டிரபதி பதவி, கோயிலில் உள்ள மூல விக்ரஹம் போன்றது "**

என்று தம் நிலையை உவமைகாட்டி விளக்கிய திரு. ரெட்டி அவர்கள் தம் அதிகார வரம்புபற்றிக் குறிப்பிடுகையில்,

> **" நல்லதோ, கெட்டதோ, ராஷ்டிரபதிக்கு அதில் நேரடிச் சம்பந்தம் இல்லை என்றாலும் அவர்பேரால்தான் நடக்கிறது "**

என்று விளக்கியிருக்கிறார். மேலும் அவர் கூறுகையில் இன்னும் ஓர் அரிய சமய உண்மையை விளக்குகின்றார்.

> **" ராஷ்டிரபதி இந்நாட்டின் தலைவரேதவிர நிர்வாகி அல்லர். அவர் கோவிலின் மூலவிக்ரஹம் போன்றவர் ! அல்லது அர்ச்சகர் என்றும் சொல்லலாம். "**

மேற்கண்ட, நமது குடியரசுத் தலைவர் அவர்களின் பேச்சும், அதில் பொதிந்துகிடக்கும் சமய உண்மைகளும் நம் சிந்தனையைத் தூண்டத் தக்கனவாக அமைகின்றன.

உலக சமயங்கள் ஒப்பிய உண்மை :

ஒப்பாரும் மிக்காரும் இல்லாத ஒருபெரும் தலைவனாலேயே உலக இயக்கம் தடையின்றி நடைபெற்றுவருகின்றது என்பதனைப் பெரும்பாலும் உலகின் எல்லாச் சமயங்களும் உடன்படுகின்றன. அத்தலைவனுக்கு உலகமதங்கள் வெவ்வேறு நாமங்களைச் சூட்டி அழைப்பினும், ஒப்பற்ற பரம்பொருள் ஒருவனால்தான் உலகம் இயங்குகின்றது என்பதிலே அவர்கள் முரண்படுவதில்லை. இந்து மதத்தில் சைவ சமயம் இத்தலைவனைச் சிவம் என்று குறிக்கிறது. உலகில் எல்லா ஆற்றல்களும் இயக்குவது - இயங்குவது என்ற இரண்டு கூறுகளாகப் பகுக்கப்படும். சிவபெருமானை இயக்கும் ஆற்றலாகவும், அவனது திருவருட் சக்தியை இயங்கும் ஆற்றலாகவும் குறிப்பிடலாம். எல்லா இயக்கங்களுக்கும் மூலகாரணம் சிவமே யாயினும், இயங்கிநின்று தொழிற்படுவது சக்தியேயாகும். சக்தியின் செயற்பாடுகள் எல்லாம், தன்னிலையில் திரியாத சிவத்தின் ஆணை வழியேதான் நிகழ்கின்றன என்பது சாத்திரங்கண்ட உண்மை.

நமது அரசியல் அமைப்பு:

நமது ராஷ்டிரபதி அவர்கள் தம்மை மூல விக்ரகத்தோடு ஒப்பிட்ட அருமைப்பாடு மேற்கண்ட சமயக் கருத்தோடு பொருந்தி வருதல் மகிழ்வூட்டுகின்றது. நமது அரசியல் அமைப்பில் செயற் படுத்தும் அதிகாரமும் ஆற்றலும் குடியரசுத் தலைவருக்கே உண்டு. அவர் ஆணைவழி நின்று செயற்படும் சக்திபேதங்களாகவே அமைச்சர் அவையைக் குறிப்பிட வேண்டும். அமைச்சரவை சமூக மேம்பாடு குறித்து ஆய்ந்து எடுக்கும் எந்த முடிவும் சட்டம் ஆக்கப் பெற்றாலும் ராஷ்டிரபதியின் அங்கீகாரம் பெற்ற பிறகே அச்சட்டம் செயற்படத் தொடங்கும். எனவே, அமைச்சரவையின் இயக்கத்திற்கெல்லாம் மூலகாரணமாக விளங்கும் கருவறையிறைவனை ஒப்பிட்டுக்காட்டியது மிகவும் பொருத்தமுடையதேயாகும்.

மாறுபடாத் தத்துவம்:

இறைவனைக் 'கோ' என்றும், அவன் திருமேனிகொண்டு எழுந் தருளியிருக்கும் இடத்தைக் 'கோயில்' என்றும் குறிப்பர். இறை வனுக்குக் கொடி, குடை, வாகனம் போன்றவை உண்டு. இந்த அமைப்பே அரசியலிலும் இடம் பெற்றன. நாடாளும் மன்னனைக் 'கோ' என்றும், அவன்வாழும் அரண்மனையைக் கோயில் என்றும் குறித்தலும், மன்னர்கள் பல்வேறு அடையாளச் சின்னங்களைத் தமதாகக் கொண்டிருத்தலும் வரலாறுகாட்டும் பொருத்தங்களாகும். மன்னனை இறைவனுகவே காணும் பழக்கமும் நம்மிடையே நிலவி வந்திருப்பதைக் காணமுடிகிறது. காலமாறுபாட்டால் மன்னராட்சி மறைந்து மக்களாட்சி நிலவினும், அத்தத்துவம் மாறுபடாது இன்றும் ஜனுதிபதியாகவும், மந்திரிசபையாகவும் காட்சியளிப்பதைக் காணமுடி கிறது. நமது அரசியல் அமைப்பில் மத்திய அரசில் இருப்பதுபோல, மாநில அரசுகளிலும் கவர்னர் அமைச்சரவை என்ற அமைப்பு இருப்பதை நன்கு உற்றுநோக்கவேண்டும். நாட்டின் கடைசி அரசு ஊழியரின் அதிகாரமும் ஜனுதிபதியின் பெயராலேயே அமுல்படுத்தப் படுகின்றது. இது போல எந்த ஒரு சிறு தெய்வத்தின் திருவரு ளானாலும், அது மூலப்பொருளினுடைய ஆணைவழியே அமைகிறது என உணரவேண்டும்.

மூலப் பரம்பொருளின் கொடை:

எங்கோ, மின்சாரம் உற்பத்தியாகும் தலைமை நிலையம் ஒன்று உண்டு. அணுகமுடியாத பேராற்றல் பெற்ற அச்சக்தி கம்பிகள் வழியாகப் பல இடங்களுக்கும் வந்து, அங்கங்குள்ள துணை மின் நிலையங்களால் ஆற்றல் பகுக்கப் பட்டு, நமது இல்லங்களுக்குவந்து,

காற்றை வழங்கும் மின்விசிறியாகவும், ஒளியை வழங்கும் விளக்காகவும், ஓசையைவழங்கும் வானொலிப்பெட்டியாகவும், வெப்பம்தரும் மின் அடுப்பாகவும் பயன் நல்குகின்றன. ஒருபொத்தானை அழுத்திய வுடன் மின்விசிறி சுழல்கிறது என்பதனால் பொத்தானே மின் விசிறியின் சுழற்சிக்குக் காரணமாகிவிடுவதில்லை. எங்கோ இருக்கும் தலைமை மின்நிலைய ஆற்றலைப் பகிர்ந்து வழங்குகின்ற பொறுப்பே அதனுக்கு உண்டு. எனவே சமய வாழ்வில் யாதொரு தெய்வத்தை வழிபட்டாலும் அது வழங்கும் வரம் எல்லாம், மூலமும் முதலுமாக விளங்கும் பரம்பொருளின் கொடையே என்பதனை உணரவேண்டும்.

கயிலைக் குருமணியின் விளக்கம் :

திருக்கோயில்களில் மூலவர் இடம்பெயர்வதில்லை. அவருடைய சாநித்தியம் பெற்ற உற்சவ மூர்த்திகளே பெரிதாக அலங்காரம் செய்விக்கப்பெற்றுத் தேரிலும், பெரிய வாகனங்களிலும் திருவீதியுலாவாக வருகின்றனர். எனவே, ஜனாதிபதியின் அதிகாரத்தைச் செயற்படுத்தும் தலைவர்களாகவே, மந்திரிசபையினர் செயல்படுகின்றனர். இக்கருத்தை ஒப்பிட்ட திரு. ரெட்டி அவர்களின் பேச்சு, சமய உண்மையை விளங்கிக்கொள்ளப் பெரிதும் உபகாரமாக அமைகிறது. இக்கருத்தினை மேலும் எளிமைப்பட விளங்கிக்கொள்ளும்பொருட்டு, தருமையாதீனம் இருபத்தைந்தாவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்கள் ஒருசமயம் திருவாய்மலர்ந்தருளிய செய்தி ஒன்றைக் கீழே தருகின்றோம்.

> "இறைவன் ஒருவன் என்பது உண்மையே; இறைவன் பொருளால் ஒன்றாயினும், சக்தி - சிவம் என்னும் தன்மையால் இரண்டாய் இருக்கிறான். அஃது எவ்வாறு எனின் கதிரவன் ஒருவனே 'தானும், தனது கதிரும்' என இரு தன்மைபட்டிருத்தல்போலவாம்.

என விளக்கியருளும் கயிலைக் குருமணி அவர்கள் இக்கருத்தினை மேலும் எளிமைப்படுத்தித் திருவாய்மலர்ந்தருளுகின்றார்கள் :-

> " கதிரவன் இப்பூமிக்கு எத்தனையோ கல் தொலைவிற்கு அப்பால் இருக்கிறான் என்பதும், ஆயினும் அவனது கதிர் இப்பூமியில் படிந்து பொருள்களை விளக்குகின்றது என்பதும் நாம் நன்கு அறிந்தவை. பூமியில் படிந்து பொருள்களை விளக்குகின்ற கதிர்களை, பூமியில் படியவில்லை; அஃது எங்கோதான் இருக்கின்றது என்று சொல்லமுடியுமோ? முடியாது! ஆயினும் பூமியில் விழுகின்ற கதிர்களைச் 'சூரியன்' என்றோ, அல்லது சூரியன்தான் பூமியில்வந்து நின்று பொருள்களை விளக்குகின்றான் என்றோ சொல்ல முடியுமா? அதுவும் முடியாது! அதனால் கதிரவனும்

அவன் கதிரும் ஒன்றுதான் என்றும் சொல்வதற்கில்லை. கதிரவனும் கதிரும் இரண்டல்ல என்பது யாவரும் நன்கறிந்தது. அதனால், இரண்டும் இரண்டு தனிப்பொருள் என்றலும் கூடாது. இவ்வாறு பகலவன் ஒருவனே தானும் தனது ஒளியும் என இருதன்மைப்பட்டுநிற்றல்போலத்தான் இறைவன் ஒருவனே தானும் தனது சக்தியும் என இருதன்மைப் பட்டிருக்கின்றான்."

இக்கருத்தினை மேலும் விளக்குகையில் கயிலைக்குருமணி அவர்கள்,

"சூரியன் பேரொளியாகிய ஆற்றல் உடையவனாய் இருப்பதனால் அவன் எங்கும் வியாபிப்பதும், அவன் முன்னிலையில் எத்தனையோ செயல்கள் நடைபெறுவதும் உண்டாகின்றன. அதுபோலத்தான் இறைவன் பேராற்றல் உடையவனாய் இருப்பதனால், அவன் எங்கும் வியாபிப்பதும், அவன் முன்னிலையில் எல்லாச் செயல்களும் நடைபெறுவதும் உண்டாகின்றன"

என்று விளக்கியருளினார்கள்.

ஒப்புமையால் வந்த சிந்தனை :

ஒரு செய்தியை நமது குடியரசுத்தலைவர் காட்டிய ஒப்புமையின் பயனாகக்கூறி நிறைவு செய்வோம். புயலால் பாதிக்கப்பட்ட ஒருவனுக்கு ஒரு கிராம அதிகாரி ஆயிரம் ரூபாய் அரசின் நன்கொடை வழங்கினால், அக்கிராமவாசி கிராம அதிகாரி இவ்வுதவியை வழங்கியதாகக் கருதி, அவரைப்போற்றி நன்றி பாராட்டுகின்றான். ஆனால் உண்மையில் இவன்பெற்ற உதவி அடுத்தடுத்து உற்று நோக்கினால் ஜனாதிபதியின் கட்டளையால் வந்து கிடைத்திருப்பது புரியும். ஜனாதிபதி அதிகார வரம்புக்குட்பட்ட அரசில்கிராம அதிகாரி ஒரு சிறு அங்கம். அவர் ஜனாதிபதி கட்டளையை நிறைவேற்றுபவரே தவிர தாமே உதவும் அதிகார வரம்புடையவர் அல்லர். அதுபோல மக்கள் தங்கள் தகுதிக்கும் தரத்திற்கும் ஏற்ப வழிபடும் தெய்வம் யாதாயினும் அதனால் பெறும் நன்மை தீமைகளெல்லாம் மூல பரம் பொருளாகிய சிவபரம்பொருளின் திருவருளால் நிகழ்வன என்று உணர்ந்து அப்பொருளைத்தினமும் கண்டுபோற்றி வணங்கிவழிபடுதலே அறிவுடைமையும் முறைமையுமாகும். இதுகாறும் கூறியவற்றால் ஒரு தத்துவத்தை உறுதியாக உணர்கிறோம். அதுதான் மூலப்பொருள் தன்னை வெளிக்காட்டாது இருக்கும் என்பது. இதனால் இயக்கும் சிவத்தின் பெருமையும், இயங்கும் சக்தியின் தன்மையும் இனிது விளங்குகிறதல்லவா ? இத்தத்துவத்தை நினைவுபடுத்திய இந்தியக் குடியரசுத் தலைவர் வாழ்க ! இந்தியத் தத்துவ உணர்வு வளர்க !

உ
குருபாதம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம்

26-ஆவது குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

காஞ்சிபுரம் தொண்டைமண்டல ஆதீனம்

230 ஆவது குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ ஞானப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள்

பீடாரோகண விழாவிற்கு 12—2—78 அன்று எழுந்தருளியபோது

வழங்கியருளிய

ஆசியுரை

திருச்சிற்றம்பலம்

எல்லா உலகமும் ஆனாய் நீயே
ஏகம்பம் மேவி இருந்தாய் நீயே
நல்லாரை நன்மை அறிவாய் நீயே
ஞானச் சுடர்விளக்காய் நின்றாய் நீயே
பொல்லா வினைகள் அறுப்பாய் நீயே
புகழ்ச்சே வடியென்மேல் வைத்தாய் நீயே
செல்வாய செல்வம் தருவாய் நீயே
திருவையா றகலாத செம்பொற் சோதீ.

ஆயிரத்து முந்நூறு ஆண்டுகளுக்கு முன்னர் அப்பரடிகள் பாடியருளிய திருத்தாண்டகப் பாடல் இது. அப்பர்பெருமான் தென் கயிலாயமாக விளங்கும் திருவையாற்றில் உள்ள பெருமானைத் தரிசித்தபோது பாடியருளிய இத்திருப்பாடலில் கூட்டுச்சிந்தனையாக ஐயாற்றிறைவனையும் காஞ்சிபுரத்தில் விளங்கும் ஒற்றைமாவடிப் பெருமானையும் இணைத்துப் பாடியருளியிருப்பதைக் காண்கிறோம். இவ்விரு தலங்களையும் இணைத்து எண்ணுவதற்கு அடிப்படைக் காரணம் யாதெனச் சிந்திப்போம்.

காஞ்சிபுரம் - ஐயாறு - ஆரூர்.

எல்லாம் வல்ல இறைவன் மண் புனல் அனல் கால் வெளி ஞாயிறு திங்கள் உயிர் ஆகிய எண்வகை வடிவங்களைக்கொண்டு விளங்குகின்றான். இவ்வெண்வகை வடிவங்களையும் அஷ்டமூர்த்தங்கள் என்று கூறுவர்.

திருவையாறு காஞ்சிபுரம் ஆகிய இருதலங்களிலும் இறைவன் மண் வடிவில் விளங்குகின்றான். இவ்விருதலங்களிலும் உள்ள சிவலிங்கங்கள் பிருதிவியாலானவை என்பது அன்பர்கள் பலரும் அறிவார்கள். அப்பர் திருவையாற்றையும் காஞ்சிபுரத்தையும் இணைத்ததுபோல, மணிவாசகப்பெருமானும் ஆரூர் இறைவனையும் ஐயாற்றிறைவனையும் இணைத்து,

ஆரூர் அமர்ந்த அரசே போற்றி
சீரார் திருவையாறு போற்றி.

என்று அருளிச்செய்கின்றார். பஞ்ச பூதத் தலங்களில் திருவாரூர் பிருதிவித்தலமாக விளங்குவது. அங்குள்ள பெருமான் வன்மீகநாதர் என்றும், தமிழில் புற்றிடங்கொண்டார் எனவும் வழங்கப்பெறுவார்.

காஞ்சிபுரம் :

காஞ்சிபுரம் வரலாற்றுச் சிறப்புமிக்க தொன்மையான நகரம். பெரியபுராணத்தில் திருக்குறிப்புத்தொண்ட நாயனார் வரலாற்றில் தொண்டை நாடாகிய இந்நாட்டின் சிறப்பையும் இந்நாட்டின் தலை நகரமாகிய காஞ்சிமாநகரின் பெருமையையும் விரித்துரைக்கின்றார் சேக்கிழார். அன்னை காமாட்சி இறைவன்பால் இருநாழிநெல்பெற்று முப்பத்திரண்டு அறங்களைச்செய்தசிறப்பையும் சிவலிங்கப்பெருமானைப் பூசித்து வளைத்தழும்பும் முலைத்தழும்பும்பொருந்த வழிபட்ட பெருமையையும் இத்தலம் பெற்றுள்ளது. எங்கு நோக்கினாலும் சிவாலயங் களாகத்திகழ்வது இந்நகரின் தனிப்பெருமையாகும்.

சக்தியைச் சிவத்தோடு சேர்த்தே வழிபட்டனர் நம் முன்னோர். திருக்கோயில்களில் உள்ள சிவலிங்கம் சக்தி சிவம் இரண்டுமிணைந்த வடிவமாகும். முற்காலங்களில் கோயில்களை அமைத்த ஞானியர் களும் மன்னர்களும் நம் முன்னோர்களும் சிவலிங்கத்தை மட்டுமே கோயில்களில் மூல மூர்த்தியாகப் பிரதிஷ்டை செய்தனர். சக்தியைத் தனியே பிரித்துத் தனிவடிவமாக அமைத்து வழிபடும் முறை பிற்காலத்தில்தான் ஏற்பட்டது என்பர் வரலாற்றறிஞர். காஞ்சிபுரத்தில் உள்ள ஏகாம்பரநாதர் கோயில் தனியே உள்ளது. ஆலயத்தில் அம்பாள்கோயில் இல்லை. அம்பாள் இல்லாத இத்தகையகோயில்கள் ஐந்து உள்ளன இத்தலத்தில். ஏலவார்குழலி என்ற திருப்பெயருடன் அம்பாள் செப்புத்திருமேனியாகவே இவ்வைந்து கோயில்களிலும் காட்சியளிக்கிறார். மூலவிக்கிரக அம்பாள்கோயில் இல்லை என்பது, இக்கோயில்களின் பழமையையும், ஆதியில் அம்பாள் வழிபாடு தனியே இல்லை என்பதையும் புலப்படுத்தும். மொகஞ்சதரோ அகழ் வாய்வும் இதற்குத் துணைசெய்கின்றது.

சோமாஸ்கந்தவடிவம் :

இறைவனுடைய மகேஸ்வரமூர்த்தங்கள் இருபத்தைந்தில் சோமாஸ்கந்தர் வடிவமும் ஒன்ருகும். சோமாஸ்கந்தர் என்பதற்கு உமையோடும் முருகனேடும் கூடியவர் என்பது பொருள். வலப்புறம் சிவபெருமானும் இடப்புறம் அம்பிகையும் எழுந்தருளியிருந்து, நடுவில் முருகப்பெருமானை வைத்து மகிழும் நிலையில் விளங்கும் இத்திருவுருவம் கோயில்கள்தோறும் விளங்குவதைக் காணலாம்.

காஞ்சிபுரத்தின் கோயிலமைப்பு சோமாஸ்கந்த வடிவஅமைப்பை நமக்கு விளக்கும் நிலையில் அமைந்திருப்பது அறிதற்குரியது.

வலப்புறம் ஏகாம்பரநாதர் கோயிலும், இடப்புறம் காமாட்சியம்மை கோயிலும், நடுவில் குமரகோட்டமும் அமைந்துள்ளதை இன்றும் கண்டு மகிழலாம்.

உண்மை அறிவு ஆனந்தம் என்ற மூன்றுநிலையில் சச்சிதானந்த வடிவாய் இறைவன் இத்தலத்தில் விளங்குவதை நாம் உணர வேண்டும். சத்து - உண்மை. அதாவது என்றும் உள்ளது. அதுவே சிவம். சித்து - அறிவு. அதுவே சத்தி. ஆனந்தம் - இன்பம். அதுவே முருகன். சத்து, சித்து, ஆன்ந்தமே சச்சிதானந்தமாக விளங்குகிறது. நாம் வணங்கி வழிபடும் இறைவன் என்றும் உள்ள உண்மைப்பொருளாகவும், என்றும் உள்ள அறிவுப்பொருளாகவும், என்றும் உள்ள இன்பப்பொருளாகவும் உள்ளான் என்பதைச் சச்சிதானந்தம் என்ற பெயரும், சோமாஸ்கந்தவடிவமும் உணர்த்துகின்றன.

கோயில்களும் மடங்களும் :

திருக்கோயில்களும் திருமடங்களும் சைவத்தின் இரு கண்கள் போல விளங்குவனவாகும். இவ்விரண்டையும் பேணிக்காத்து வளர்த்தால்தான் சைவம் வளரும். தமிழ்நாட்டில் சைவசமயத்தைப் பேணிக் காக்கும் பெரும்பொறுப்பை மேற்கொண்ட ஆதீனங்கள் பதினெட்டு இருந்தன. அவற்றுள் பல ஆதீனங்கள் இன்று பெயரளவில்தான் உள்ளன. சில ஆதீனங்களே நல்ல நிலையில் உள்ளன. திருக்கயிலாய பரம்பரைத் தொடர்போடு வழிவழியாக உபதேசபரம்பரையில் வரும் இத்திருமடங்கள் மக்களுக்கு அறநெறிகளை அருளி அவர்களை நல்வழிப்படுத்தும் தொண்டுகளைச் செய்துவருகின்றன.

கயிலாய பரம்பரை :

கயிலாய பரம்பரை, நந்தி மரபு, மெய்கண்ட சந்தானம் என்ற அடை மொழிகள் திருமடங்களின் பாரம்பரியத்தை விளக்குவன

வாகும். திருக்கயிலாயத்தில் இறைவன் நந்திதேவர்க்கு ஞானமார்க்கமான பல உண்மைகளை உணர்த்தியருளினர். நந்திதேவர் தாம் பெற்ற அவ்வுபதேசங்களைச் சனற்குமாரமுனிவர்க்குவழங்கினர். அவர் சத்தியஞான தரிசனிகளுக்கும் அவர் பரஞ்சோதிமா முனிவர்க்கும் உணர்த்தியருளினர். நந்தி தேவர் முதலாக வரும் இம்மரபே நந்தி மரபு எனப்படும். நந்திதேவர் முதலிய இந்நால்வரும் திருக்கயிலையில் விளங்கும் ஆசாரியர்கள். இவர்கள் அகச்சந்தானகுரவர் எனப்படுவர்.

மெய்கண்டசந்தானம் :

அகச்சந்தான குரவர்களில் நான்காமவராகிய பரஞ்சோதி மாமுனிவர் தாம் பெற்ற அருள் உபதேசங்களை நிலவுலகில் மெய்கண்டாருக்கு உணர்த்தியருளினர். மெய்கண்டார் முதலாக அவ்வுபதேச பரம்பரை அருணந்திசிவம், மறைஞான சம்பந்தர், உமாபதிசிவம் ஆகிய நால்வர் வழியே உலகில் நன்கு நிலைபெறுவதாயிற்று. மெய்கண்டார் முதலாகவரும் இவ்வுபதேச பரம்பரையை மெய்கண்ட சந்தானம் எனக்கூறுவர். இவ்வுபதேச பரம்பரை சைவ ஆதீனங்களில் நின்றுநிலவி உலகமக்களுக்கு உய்யும்நெறி காட்டிவருகின்றது.

ஞானவேட்கை :

திருமடங்களின் தலைவர்களாய், மகாசந்நிதானங்களாய்விளங்கும் ஆசாரியர்கள் தங்களை நாடிவரும் அன்பர்களுக்கு அருளுபதேசங்கள் செய்து அவர்களை நன்னெறிப்படுத்தும் பணியை ஆற்றி வருகின்றனர்.

> அன்பு மிகவுண்டாய் அதிலே விவேகமுண்டாய்த்
> துன்ப வினையைத் துடைப்பதுண்டாய் — இன்பம்
> தரும் பூரணத்துக்கே தாகமுண்டாய் ஓடி
> வருங் காரணர்க்கு உண்மை வை.

என்பது நமது ஆதிபரமாசாரியராகிய ஸ்ரீ குருஞான சம்பந்தர் திருவாக்கு. ஞான வேட்கை உடையவராய்த் தம்மை வந்தடையும் அன்பர்கட்கு உபதேசம் செய்வதோடு அமையாது, சென்று நடாத்தும் தண்டத்தலைவர்கள் போலப் பல இடங்களுக்கும் சென்று மக்களுக்கு அறிவுரை கூறி அருளுபதேசங்கள் வழங்கும் பணியையும் மகாசந்நிதானங்கள் செய்துவருகின்றனர்.

தொண்டைமண்டல ஆதீனம் :

காஞ்சிபுரத்தில் விளங்கும் ஸ்ரீ ஞானப்பிரகாச தேசிக சுவாமிகள் ஆதீனம் மிகப்பழமையான ஆதீனங்களில் ஒன்றாகும். மெய்கண்டாரிடம் அருளுபதேசம் பெற்ற பரம்பரையில் வந்த சிற்றம்பல நாடிகளின்

வழியில் வந்த ஸ்ரீ ஞானப்பிரகாச தேசிக சுவாமிகளால் இவ்வாதீனம் தோற்றுவிக்கப்பெற்றுள்ளது. இத்திருமடம் தொண்டை மண்டல முதலியார்களின் ஆசாரிய பீடமாக விளங்கி வருதல் குறிப்பிடத் தக்கதாகும். இத்திருமடத்தின் ஞானபீடத்தை அலங்கரித்து முது பெரும் புலவராக விளங்கிய 229 ஆவது மகாசந்நிதானம் ஸ்ரீ ஞானப் பிரகாச தேசிக சுவாமிகள் அண்மையில் பரிபூரணமானார்கள்.

அவர்கட்குப் பின்னர் இவ்வாதீனக் குருத்துவத்தையும், பரி பாலனத்தையும் தக்கவர் ஒருவரிடம் ஒப்படைக்க வேண்டுமென்று நம் அன்பர்கள் திரு. வி. கே. இராமசாமி முதலியார், திரு. எம். எஸ். சாரங்கபாணி முதலியார் முதலியோர் விரும்பினர். கோவையில் பெரிய புராணப் பேருரையாளராக - சிவக்கவிமணியாக விளங்கிய திரு. சி. கே. சுப்பிரமணிய முதலியார் அவர்களின் உறவினரும் பிரமசரிய விரதத்தைக் கடைபிடித்து வாழ்ந்து வருபவரும் சமயநூல்களில் மிக்க ஆர்வமும் புலமையும் உடையவருமாகிய அன்பர் ஞானசம்பந்தன் என்பவரைத் தேர்ந்தெடுத்து, தருமையாதீனத்திற்கு அனுப்பிவைத் தனர். காஞ்சி ஸ்ரீஞானப்பிரகாச தேசிக சுவாமிகளின் பீடத்துக்கு உரியவராதற்குள்ள பயிற்சி அளித்தருளும்படி நம்மிடம் கேட்டுக் கொண்டனர். அவர்கள் விரும்பியவாறே இவர்களுக்குத் துறவுநிலை வழங்கித் தீட்சைகள் செய்வித்து ஆதீன சம்பிரதாயங்கள் பல வற்றையும் விளக்கிப் பயிற்சி அளிக்கப்பெற்றது. இன்று இவர்களுக்குத் தொண்டைமண்டல ஆதீன சம்பிரதாயப்படி ஆசாரியாபிஷேகம் நமது முன்னிலையில் சிறப்பாக நடைபெற்றதை எல்லோரும் கண்டு மகிழ்ந்திருக்கிறீர்கள்.

அன்பர்கள் பலரும் இப்பழமையான ஆதீனம் மறுமலர்ச்சியுற்றுத் திகழ்வதற்குத்தங்களாலான ஆக்கத்தையும் ஊக்கத்தையும் வழங்கிட வேண்டும். புதிதாக ஒரு மடம் அமைப்பதைவிடப் பழமையான ஒரு திருமடத்தை வளர்ப்பதே பெரும்புண்ணியமாகும். அன்பர்களும் அறநிலையத்துறையினரும் இத்திரு மடத்தின் சீடர்களும் இத்திரு மடத்தின் வளர்ச்சிப்பணிகளுக்கு உதவிசெய்து நலம் பெறுவார்களாக.

இன்று 230 ஆவது குருமூர்த்திகளாப் பொறுப்பேற்றுள்ள காஞ்சி ஸ்ரீ ஞானப்பிரகாச தேசிக சுவாமிகள், ஆதீனத்தை வளப்படுத்தி நீடு வாழவும், இவ்வாதீன வளர்ச்சிப்பணிகளில் பங்குபற்றும் அன்பர் களுக்கு எல்லா நலன்களும் உண்டாகவும் செந்தமிழ்ச் சொக்கன் திருவடிகளைச் சிந்திக்கின்றோம்.

வாழ்க குருவருள்

வளர்க குவலயம்

9 — 7 — 78 அன்று நிகழ்ந்த
ஸ்ரீ மாணிக்கவாசக சுவாமிகள் குருபூஜை விழாவில்
மதுரை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள்
ஸ்ரீ அப்பர் குருகுல மாணவர்களை ஆசீர்வதித்தல்.

"மூலவிக்கிரஹம்"

மாண்புமிகு. திரு. சஞ்சீவி ரெட்டி அவர்கள் பேச்சு.

"இந்தியாவின் ராஷ்டிரபதி பதவி 'கோவிலில் உள்ள மூல விக்கிரஹம்' போன்றது. நல்லதோ, கெட்டதோ ராஷ்டிரபதிக்கு அதில் நேரடி சம்பந்தம் இல்லை என்றாலும் அவர்பேரால்தான் நடக்கிறது.

ராஷ்டிரபதி அரசியல் சட்டப்படி அனைத்துக் கட்சிகளாலும் தேர்ந்தெடுக்கப்பட்ட இந்நாட்டின் தலைவரே தவிர, நிர்வாகியல்ல. அவர் கோவிலின் மூலவிக்கிரஹம் போன்றவர், அல்லது அர்ச்சகர் என்றும் சொல்லலாம். அவர்பேரால்தான் எல்லாம் நடக்கிறது".

நன்றி. — தினமணி 10—7—78.

உ
சிவமயம்

ஆயில்யத்திருநாள் ஆலய வழிபாடு

தருமையாதீனம் 26 - ஆவது குருமகாசந்நிதானம் **ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்** தமது குருமூர்த்திகள் காட்டியருளிய வழியிலேயே தமது ஜன்ம நட்சத்திரமாகிய ஆயில்யத் திருநாளில் பாடல்பெற்ற தலங்கள் தோறும் முறையான வழிபாட்டிற்கு வழிகாட்டிவருகின்றுர்கள். காவிரித் தென்கரைத்தலங்களில் ஆயில்யத்திருநாள் வழிபாடு நடைபெறுகிறது. உழவாரப்பணி, விசேட அபிடேக ஆராதனைகள், தலத் திருப்பதிகங்களை அர்ச்சிட்டு ஓதி வழங்குதல். சமயப் பிரசாரம் முதலியன ஆயில்யத் திருநாள் வழிபாட்டின் அங்கங்களாகும்.

நிகழும் **காளயுக்தி ஆண்டு ஆவணித்திங்கள் 16 ஆம் நாள் (1—9—1978) வெள்ளிக்கிழமை காலை 9 மணி அளவில் திருத்தென்குடித்திட்டை அருள்மிகு உலகநாயகி உடனுகிய அருள்மிகு பசுபதிநாதர் திருக்கோயிலிலும், மாலை 6 - மணி அளவில் திருபுள்ளமங்கை அருள்மிகு பல்வளைநாயகி உடனுகிய அருள்மிகு பசுபதிநாதர் திருக்கோயிலிலும். இரவு 8 மணி யளவில் திருச்சக்கரப்பள்ளி அருள்மிகு அல்லியங்கோதை உடனுகிய ஆலந்துறைநாதர் திருக்கோயிலிலும்** விசேஷ அபிஷேக ஆராதனைகளுடன் ஆயில்யத்திருநாள் சிறப்புவழிபாடுகள் நடைபெறும்.

அன்பர்கள் அனைவரும் வருக! வழிபட்டு உய்க! அரன் அருள் பெறுக.

குறிப்பு :- காலை 8 - மணி அளவில் தொடங்கி அன்பர்கள் பலரும் உழவாரத் திருப்பணிபுரிவர். அன்பர்கள் வழிபாட்டிற்கு உரிய பால் இளநீர் முதலிய அபிஷேகத் திரவியங்கள் கொண்டு வரலாம்.

திருச்சோற்றுத்துறை, திருவேதிகுடித் தலச் சிறப்புக்கள்

தருமையாதீனத் தமிழ்ப்புலவர்,

வித்துவான். திரு. வி. சா. குருசாமிதேசிகர் எம்.ஏ.,

1. திருச்சோற்றுத்துறை

சோழவள நாடு சோறுடைத்து என்னும் புகழுரைக்குச் சான்றாகத் திகழும் தஞ்சைமாவட்டத்தில் திருக்கண்டியூருக்குக் கிழக்கே 4 கி. மீட்டர் தூரத்தில் குடமுருட்டியாற்றின் தென்கரையில் இத்தலம் உள்ளது. திருவையாற்றிலிருந்தும் திருக்கண்டியூரிலிருந்தும் இத்தலத் திற்குச்செல்லப் பேருந்து வசதிகள் உள்ளன.

சோறு என்பது உண்ணும் சோற்றையும், துகரும் பேரின்பத்தை யும் குறிக்கும் சொல்லாகும். சோற்றுத்துறை என்னும் இத்தலப்பெயர் தன்னை வழிபடும் அடியார்களின் பசிப்பிணி தீர இறைவன் சோறு வழங்குபவன் என்னும் பொருளைத்தருவதோடு, உயிரைப்பற்றிய பிறவிப்பிணி தீர வீடுபேறு வழங்கியருள்பவன் என்னும் பொருளைத் தருவதாகவும் உள்ளது.

இத்தலம், திருவையாற்றைத் தலைமைத்தலமாகக்கொண்டுதிகழும் சப்தஸ்தானத் தலங்களில் மூன்றாவது தலமாக விளங்குவது. சோழ நாட்டுக் காவிரித் தென்கரைத் திருத்தலங்களில் 13 ஆவது தலமாகத் திகழ்வது. ஊர்ப்பெயருக்கு ஏற்ப ஆண்டுதோறும் சப்தஸ்தானத் திருவிழாவில் ஏழூர் வலம்வரும் அடியார்களுக்கு இங்குப் பல சிவநேயச்செல்வர்கள் தண்பகலுணவு அளித்து மகிழ்கின்றனர்.

இந்திரன், சூரியன், கௌதமர் முதலியோர் வழிபட்டதலம். சிவபக்தனான அருளாளன் என்னும் மறையவன் பசியால் வருந்து கின்றபோது பெருமான் அம்மறையவனுக்கு எடுக்க எடுக்கக் குறை யாத அட்சய பாத்திரம் வழங்கி அவனது பசிப்பிணியை நீக்கியருளி னார் எனத் தலபுராணம் கூறுகின்றது. இத்தலத்திற்குத் திருஞான சம்பந்தர் பாடியருளிய பதிகம் ஒன்றும், திருநாவுக்கரசர் பாடியருளிய நான்கு திருப்பதிகங்களும், சுந்தரர் பாடியருளிய திருப்பதிகம் ஒன்றும் ஆக ஆறு திருப்பதிகங்கள் உள்ளன. இறைவன் வலப்பால் உமை யம்மையோடு திருக்கல்யாணத் திருக்கோலத்தில் விளங்குவது இத் தலமாகும்.

கோயிலமைப்பு :

திருச்சோற்றுத்துறை ஒரு பெரிய கிராமமாக விளங்குகிறது. குடமுருட்டியாற்றின் தென்கரையில் ஊர் உள்ளது. நான்கு வீதிகளோடும் இரண்டு பிராகாரங்களோடும் திகழும் திருக்கோயில் இவ்வூருக்குப் பெருமைசேர்க்கிறது. கட்டைக்கோபுரத்தைக் கடந்து உள்ளே சென்றால் கோபுர வாயிலில் நந்தி பலிபீடங்களைக்கொண்ட சிறிய கொட்டகை உள்ளது. வெளிப்பிராகாரத்தில் அம்பாள்கோயில் உள்ளது. மூன்று நிலைகளோடு கூடிய இராஜகோபுரவாயிலில் வலப்புறம் விநாயகரும் இடப்புறம் முருகனும் உள்ளனர். உள்ளேசென்றதும் மிகப்பெரிய முன்மண்டபம் கோயிலுக்கு அழகுசெய்கிறது. மண்டபத்தில் நடராஜசபை உள்ளது. இங்குதான் ஆலய உற்சவமூர்த்திகள் பாதுகாப்பாக எழுந்தருளுவிக்கப்பெற்றுள்ளனர். முதற் பிராகாரத்தை வலம்வரும்போது திருமாளிகைப்பத்தியில் பெருமாள் விளங்குகின்றார். அங்குச் சப்தமாதாக்களையும் தரிசிக்கலாம். மேற்குப்பிராகாரத்தில் விநாயகர், சப்தஸ்தானலிங்கங்கள், மகாலட்சுமிகோயில்கள் உள்ளன. கர்ப்பக்கிருகக் கோஷ்டங்களில் தென்புறம் தட்சிணாமூர்த்தி, மேல்புறம் அர்த்தநாரீசுவரர், வடபுறம் பிரமன், துர்க்கை ஆகியோர் உள்ளனர். நடராஜர் சபைக்கு அருகில் தலத்திருப்பதிகக் கல்வெட்டு திகழ்கிறது. நடராஜர் சந்நிதியில் நால்வர் எழுந்தருளியுள்ளனர். தரிசித்துக்கொண்டு அர்த்தமண்டபத்திற்குள் நுழையும்போது வாயிலில் பெரிய ஆறுமுகப்பெருமானைத்தரிசிக்கலாம். இத் தலத்திற்குச் சிறப்புத்தரும் மூர்த்தியாக இவர் விளங்குகின்றார். தனிக்கோயிலாக இவர் கோயில் உள்ளது. அடுத்து இருபுறங்களிலும் கௌதமர் சிலையும் கௌதமர் வழிபட்ட ஐதிகச் சிற்பச் சிலையும் காலசம்காரக் காட்சி செதுக்கப்பெற்றுள்ள சிலையும் உள்ளன.

அர்த்தமண்டபத்தைக்கடந்து உள்ளே செல்லும் நுழைவாயிலில் விநாயகர், முருகன் காட்சிதருகின்றனர். தரிசித்துக்கொண்டே கர்ப்பக்கிருகத்தை அடைந்து அருள்மிகு ஓதனவனேசுவரரை வழிபடலாம். இருபுறமும் வாயிற்காவலர் விளங்குகின்றனர். வழிபட்டுக்கொண்டு வெளியே ஸ்நபனமண்டபத்தை அடைந்து நவக்கிரகங்களை வழிபட்டுக்கொண்டு வெளிப்பிராகாரத்தை அடைந்து அம்பாள் கோயிலுக்குச் செல்லலாம்.

சுவாமிகோயிலுக்கு வலப்புறம் அருள்மிகு அன்னபூரணியம்பாள் கோயில் தனிக்கோயிலாகக் கிழக்கு நோக்கி விளங்குகின்றது. வாயிலில் விநாயகர், முருகன் காட்சிதருகின்றனர். தரிசித்துக்கொண்டு உள்ளே சென்றால் அம்மை அருள்மிகு அன்னபூரணியம்மையை வழிபடலாம். சந்நிதியின் இடதுபுறம் மகாலட்சுமி திருவுருவம் உள்ளது.

மூர்த்திகள் :

சுவாமிபெயர் அருள்மிகு தொலேயாச்செல்வர். அம்மைபெயர் அருள்மிகு ஒப்பிலாம்பிகை. வடமொழியில் ஓதனவனேசுவரர் அன்ன பூரணி என வழங்கப்பெறுகிறது.

தீர்த்தம்: காவிரி.

சூரியன் வழிபட்டது :

தக்கயாகத்துக்குச் சென்ற சிவாபராதம் நீங்கச் சூரியன் இத் தலத்தில் இறைவனை வழிபட்டு பழிநீங்கப்பெற்ருன். 'செங்கதிரோன் சோற்றுத்துறை' எனவும் 'விரிகதிரோன் சோற்றுத்துறை' எனவும் அப்பர்பெருமான் இத்தலத் தேவாரத் திருப்பதிகத்துள் குறிப்பிட் டிருத்தல் அறியத்தக்கது.

கௌதமர் வழிபட்டது :

சப்தரிஷிகளில் ஒருவர் கௌதமர். தவப்பெருமையில் சிறந்தவர். அவர் இத்தலத்தில் தங்கித் தவமியற்றி முத்திபெற்ற காரணத்தினல் இத்தலம் கௌதமாசிரமம் என வழங்கப்படும். கௌதமர் சிலை கோயிலுக்குள் இருக்கிறது.

இந்திரன் வழிபட்டது :

கௌதம முனிவரின் மனைவி அகலிகை. அவளிடத்துத் தகாத முறையில் விருப்புக்கொண்ட இந்திரன் கௌதமரின் சாபத்திற்கு ஆளானுன். இந்திரன் இத்தலத்திறைவனை வழிபட்டு முனிவரின் சாபத்திலிருந்து விலக்கு பெற்றனன் எனக்கூறுவர்.

அக்ஷய பாத்திரம் வழங்கியது :

அருளாளர் என்னும் அந்தண அன்பர் ஒருவர் இத்தலத்து இறைவனிடம் நீங்காத அன்பு உடையவர். பஞ்சகாலத்தில் அருளாள ரும் சிவனடியார்களும் பசிப்பிணியால் இடருறநேர்ந்தது. அடியார்கள் பசித்திருக்கப்பொருத இறைவன் அருளாளருக்கு எடுக்க எடுக்கக் குறையாத அக்ஷய பாத்திரம் ஒன்றை அருளி அனைவருடைய பசி யையும் நீக்கியருளினர். அதனல் இத்தலம் சோற்றுத்துறை எனவும் இறைவன் ஓதனவனேசுவரர் எனவும் அம்மை அன்னபூரணி எனவும் வழங்கப்பெற்றனர் எனத் தலபுராணம் கூறுகிறது.

கல்வெட்டுக்கள் :

இத்தலத்தில் சோழர்காலக் கல்வெட்டுகள் பலவும் உள்ளன. இக்கோயில் முதல் ஆதித்தன் (கி. பி. 871 — 907) காலத்துத் திருப்பணிகளைப்பெற்றுளது. இருதளக் கற்றளிவகையைச்சேர்ந்தது. கிரீவம் சிகரம் தூபி சதுரவடிவில் உள்ளன. தேவகோஷ்டச் சிலைகளிலும் தூண்களிலும் சோழர்காலக் கலைச் சிறப்புக்களைக் காணலாம்.

பராந்தகன், இரர்ஜராஜன், இராஜகேசரிவர்மன், கோனேரின்மைகொண்டான், குலோத்துங்கன் முதலியோர் காலக் கல்வெட்டுக்கள் இங்குள்ளன. விளக்குகளுக்காகவும், நிவேதனங்களுக்காகவும், விழாவிற்காகவும் நிலமும் பொன்னும் அளித்துள்ள செய்திகள் கல்வெட்டுகளில் காணப்படுகின்றன.

ஒருகல்வெட்டு நடனப்பெண்ணொருத்திக்குச் சர்வமான்யம்விட்ட செய்தியைத் தெரிவிக்கிறது. நலமல்லூர்தேவர் என்பவர் தொலையாச் செல்வருக்கு விளக்குத்தண்டுசெய்ய நிலமளித்த செய்தியைக் கூறுகிறது. கடவுள் தொலையாச்செல்வர் எனவும், திருச்சோற்றுத்துறை நாதர் எனவும் கூறப்படுகிருர்.

2. திருவேதிகுடி

தஞ்சைமாவட்டத்தில், தஞ்சாவூரிலிருந்து திருவையாற்றுக்குச் செல்லும் பெருவழியில் உள்ள திருக்கண்டியூரிலிருந்து கிழக்கே ஒரு கிலோமீட்டர் தூரத்தில் இத்தலம் உள்ளது. விரைவில் திருப்பணி செய்யப்படவேண்டிய நிலையில் கோயில் பழுதடைந்துள்ளது.

வேதி - பிரமன். பிரமன் பூசித்த காரணத்தால் வேதிகுடி எனப் பெயர் பெற்றது எனவும், விழுதிகுடி என்பது மருவி வேதிகுடி ஆயிற்று எனவும் கூறுவர்.

வேதங்கள் வழிபட்ட காரணத்தால் இத்தலம் வேதிகுடி என்னும் பெயர் எய்திற்று. இறைவன் வேதபுரீசுவரர் என வழங்கப்பெற்ருர். இத்தலம் திருஞானசம்பந்தர் திருநாவுக்கரசர் பாடிய இரண்டு திருப்பதிகங்களைப் பெற்றுள்ளது. ஞானசம்பந்தர் பாடியருளிய தேவாரத் திருப்பதிகத்துள் கன்னிப்பெண்கள் திருமணம் கொள்வதை இத்தலப் பெருமைகளுள் ஒன்ருக ஓதியிருத்தலின் இத்தலத்திறைவரைவழிபடும் கன்னிப் பெண்கள் விரைவில் கடிமணம் பெறுவர் என்பதை அறியலாம். ஐயாறப்பர் சித்திரைமாதத்தில் எழுந்தருளும் ஏழூர்ப்பதிகளுள் இது நான்காவதாகும். ஆண்டுதோறும் பங்குனித்திங்கள் 13 ஆம் நாள் தொடங்கி மூன்று நாட்கள் இங்கு சூரியபூசை நிகழ்கிறது.

மூர்த்திகள் :

இறைவன் அருள்மிகு வேதபுரீசுவரர் எனவும் இறைவி அருள்மிகு மங்கையர்க்கரசி எனவும் வழங்கப்பெறுகின்றனர். சுவாமிசந்நிதியில் இறைவன் நான்கு திருமுகங்களாலும் அருளிச்செய்யும் வேதங்களைச் செவிசாய்த்துக் கேட்கும் நிலையில் உள்ள விநாயகர் வேதவிநாயகர் எனப்பெறுவார்.

தீர்த்தம் : வேத தீர்த்தம் கோயிலுக்கு எதிரில் உள்ளது.

தலமரம் : வில்வம் வடக்குப்பிராகாரத்தில் உள்ளது.

கோயில் அமைப்பு :

கோயில் கிழக்குநோக்கி அமைந்துள்ளது. கோயிலின் எதிரே வீதியை அடுத்து வேததீர்த்தம் திகழ்கிறது. ஒருகாலத்தில் இரண்டு பிராகாரங்களை உடையதாய்த் திகழ்ந்துள்ள அமைப்பில் கோயில் உள்ளது. இப்போது ஒரு பிராகாரமே உள்ளது. அம்பாள்கோயில் இரண்டாம் வெளிப்பிராகாரத்தில் இருக்கிறது.

நந்தி பலிபீடங்களை அடுத்து அம்பாள்கோயில் தெற்குநோக்கிய சந்நிதியோடு திகழ்கிறது. அம்பாள்கோயிலை அடுத்து வசந்த மண்டபம் உள்ளது. இவற்றைத் தரிசித்துக்கொண்டு திருக்கோயிலுக்குள் செல்லலாம்.

மூன்று நிலைகளோடுகூடிய சிறிய இராஜகோபுரவாயிலைக்கடந்து கோயிலுக்குள் சென்றால் மகாமண்டபம் உள்ளது. நடராஜர் சபை இங்குள்ளது. கோயிலை வலம் வரும்போது திருமாளிகைப்பத்திகளில் நூற்றெட்டுச் சிவலிங்கங்கள் வரிசையாகப் பிரதிட்டை செய்யப்பட்டுள்ள காட்சிகளைக் காணலாம். கர்ப்பக்கிருகக் கோஷ்டங்களில் தெற்கே தக்ஷிணாமூர்த்தி, மேற்கே அர்த்தநாரீசுவரர், வடக்கே பிரமன் உள்ளனர். மேற்குப் பிராகாரத்தில் துர்க்கையையும், விநாயகரையும், முருகனையும், மகாலக்ஷ்மியையும் வழிபட்டுக்கொண்டு சுவாமி சந்நிதியை அடையலாம். ஸ்நபனமண்டப நுழைவாயிலில் விநாயகர் முருகன் காட்சியளிக்கின்றனர். உள்ளே அர்த்தமண்டபத்தை அடைந்து சந்நிதியில் நிற்கிறோம். சந்நிதியில் விநாயகர் இடதுகாலை உயரவைத்துக்கொண்டுள்ள செவிசாய்த்த விநாயகரைத் தரிசிக்கலாம். இறைவன் இத்தலத்தில் வேதங்களை அருளிச்செய்கின்ற காரணத்தினால் விநாயகர் அதனைக் கேட்டுக்கொண்டிருப்பதாக ஐதிகம் கூறப்படுகிறது. இறைவன் பெரிய திருவுருவம். அர்த்தமண்டபத்தில் உற்சவ மூர்த்திகள் பாதுகாப்பாக வைக்கப்பெற்றுள்ளன.

நடராசர் சந்நிதிக்கு அருகில் அம்பாளின் பழைய அழகிய திருவுருவம் உள்ளது. சப்தஸ்தானலிங்கங்கள் உள்ளன.

கல்வெட்டுக்கள் :

இக்கோயில் முதலாதித்த சோழன் காலத்து இருதளக்கற்றளி. இக்கோயிலில் கோஇராஜகேசரிவன்மர், கோப்பரகேசரிவன்மர் இவர்கள் காலங்களில் பொறிக்கப்பெற்ற கல்வெட்டுக்கள் உள்ளன. இக்கல்வெட்டுக்களில் இறைவர் திருவேதிகுடி மகாதேவர், பரகேசரி சதுர்வேதிமங்கலத்து மகாதேவர் என்னும் பெயர்களால் குறிக்கப்படுகிறார். இக்கல்வெட்டுக்கள் நுந்தாவிளக்குகளுக்கு நிவந்தங்கள் அளித்ததைக்குறிப்பிடுவதோடு, இக்கோயிலுக்குத்திருப்பள்ளித்தாமம் பறித்துத் தொடுப்பார் இருவர், திருமெழுக்கிடுவார் நால்வர், காளமூதுவார் நால்வர், நந்தவனக்குடிகள் மூவர் இருந்த செய்திகளைக் குறிப்பிடுகின்றன.

அன்னை அருள்மாலை

திருமுறைக் கலாநிதி

வேளூர், திரு. க. சொக்கலிங்க ஓதுவார்.

நல்வரம் ஈயுந்திருக் குடந்தைக்கீழ்க் கோட்டம்
நாடும் பெரியநாயகி
நாட்டங்கொ ளுந்திருக் குடந்தைக்கா ரோணம்
நற்றுய் விசாலாட்சியே
கொல்புலித் தோலான் உறையும் நாகேச்சுரம்
குன்றமுலை நாயகியம்மை
கோலக் குயில்பயில் திருவிடை மருதூர்
கூடுபெரு நலமாமுலை
தொல்பதி யெனச்சொலும் தென்குரங் காடுதுறை
தோன்றிய பவளக்கொடி
துணையெனக் காகும்நீ லக்குடி உமையம்மை
துதிவைகல் மாடக்கோயில்
பல்வள மெங்கும்பெருக வருவைக லாம்பிகை
பண்ணிலுறு பெண்ணமுதமே
பஞ்சின்மெல் லடியிணையைத் தஞ்சம் அடைந்தென் றும்
பணிவேற்கருள் அன்னையே. (11)

சிவமூர்த்தங்கள்

" நஜன் "

(மலர் 36 இதழ் 8 பக்கம் 417 இன் தொடர்ச்சி)

" வேதம் அசைக்குங் கோவணமும் மெய்யில் நீறும் உள்ளாளக்
கீதம் இசைக்கும் கனிவாயும் உள்ளே நகையும் கிண்கிணி சூழ்
பாதமலரும் பாதுகையும் பதிகொள் கலனும் கொண்டு இரதி
மாதர் கணவன் தவவேடம் எடுத்தார் "

என்று பரஞ்சோதிமுனிவர் வருணிக்கிறார் இறைவனின் பிச்சை ஆண்டிக்கோலத்தை.

எல்லா ஐஸ்வரியங்களையும் அளிக்கக்கூடிய அம்பிகையை மணந்தும் இறைவன் பிச்சை எடுப்பானேன்?

அவர் நம்மிடம் பிச்சை கேட்பது நமது அன்பையும் ஆணவத்தையும்தான். நம் மனதைக்கவர உடுக்கடித்துப் பார்த்திருக்கிறார். வீணையை மீட்டிப் பார்த்திருக்கிறார். நாம் இதையெல்லாம் கவனிக்கவில்லை. நேரில் கபாலத்தையே கையில் ஏந்திக்கொண்டு வந்துவிட்டார்.

ஒருகையில் பிக்ஷைவாங்கக் கபாலம்; மற்றொரு கையில் உடன் வரும் மானுக்கு உணவுதரும் தோற்றம். தஞ்சைக் கலைக்கூடம் சென்றால் இந்த அழகிய தோற்றத்தைக் கல் உருவில் காணலாம். வழுவூர்ஆலயத்தில் கண்ணைக் கவரும் அழகியசெப்புஉரு இருக்கிறது.

இந்த உலகம் இரப்போர் ஈவோர் என்ற இருவகை மக்களைக் கொண்டது. இறைவனது ஒரே திருமேனியில் இடதுபாகம் 32 அறங்களைப் புரிகிறது. வலப்பாகம் பிட்சை பாத்திரத்தை ஏந்தி நிற்கிறது. இந்த அற்புதத் திருக்கோலம் வாழ்வதாக என்று குமரகுருபரர் வாழ்த்தியுள்ளார்.

புரவலர் புரத்தலும் இரவலர் இரத்தலும்
இருவேறியற்கையும் இவ்வுல குடைத்தே, அதா அன்று,

ஒரு காலத்தில் உருவ மற்றொன்றே
இடப்பால் முப்பத்திரண்டறம் வளர்ப்ப
வலப்பால் இரத்தல் மாநிலத்தின்றே
கடிநகர் வைப்பினிற் கண்டேம்
வடிவம் மற்றிது வாழிய பெரிதே.

— திருவாரூர் நான்மணிமாலை.

இதையே சுந்தரமூர்த்தி சுவாமிகள் காஞ்சி திருவோண காந்தப் பெருமானை நோக்கி "பெருமானே! உங்களை விட்டு என்றும் பிரியாத காமாட்சி நாள்தோறும் 32 அறங்களையும் செய்துகொண்டிருக்கும் போது நீங்கள் ஏன் பிச்சை எடுக்கிறீர்" என்று கேட்கிறார்.

வார்இருங்குழல் வாள்நெடுங்கண் மலைமகள்மது விம்முகொன்றைத்
தார்இருந்தட மார்புநீங்காத் தையலாள்உல குய்யவைத்த
கார்இரும்பொழில் கச்சிமூதூர் காமகோட்டம் உண்டாகநீர்போய்
ஊர்இடும்பிச்சை கொள்வதென்னே ஓணகாந்தன் தளியுளீரே.

தவவலிமையால் செருக்குக் கொண்ட தாருகாவனத்து ரிஷிகள் பரம்பொருளை மறந்தனர். கர்மாவே பெரிதெனக் கருதினர். யாகங்களில் சிவபெருமானைத் தவிர்த்தனர். இவர்களுடைய தவறை உணர்த்திப் பாடம் புகட்டச் சிவபெருமானும், திருமாலும் முறையே பிக்ஷாடனராகவும், மோகினியாகவும் வடிவம்கொண்டு யாகசாலையை அடைந்தனர்.

மோகினியின் அழகில் மயங்கிய முனிவர்கள் அவளையே பின் தொடரலாயினர். பிட்சாண்டியைக் கண்ட ரிஷிபத்தினிகள் அவர் மோகனவடிவில் தம்மை மறந்தனர்.

யாகம் ஆரம்பிக்கும்போதே முடிவடைந்துவிட்டது. காலம் கடந்து விழித்துக்கொண்டனர் தாருகாவனத்து ரிஷிகள். என்ன பயன்? யாகம் பலனில்லாமல் போய்விட்டது. இறைவன்தான் பிச்சைஎடுக்கவந்தான் என்பதை அறியாமல் புலி, யானை, பாம்பு இவைகளை எல்லாம் யாகத்தில் சிருஷ்டித்து அனுப்பினர். இதனால் சிவனுக்குப் புலித்தோல் ஆடையும், கரி (யானை)த்தோல் ஆடையும், நாகாபரணங்களும் கிடைத்தன.

இறைவன் பிச்சை எடுக்க நேர்ந்தது குறித்து மற்றொரு தகவலும் உண்டு. ஐந்துமுகம் கொண்டிருந்த பிரும்மாவின் தவறு ஒன்றைக் கண்டிக்க ஒரு தலையைச் சிவபெருமான் கிள்ளநேர்ந்ததால் பாபம் ஏற்பட்டதென்றும், அக்கபாலம் கையிலேயே ஒட்டிக்கொண்டு விட்டதென்றும், பின்னர் அம்பிகை பிச்சையிட்டதன் பேரில் கபாலம் கையைவிட்டு நீங்கியதென்றும் புராண வரலாறு கூறுகிறது.

பிட்சாண்டவருக்கே தனி ஆலயம் இருக்கும் ஊர் பிட்சாண்டார் கோவில்எனவழங்குகிறது. அதற்கு மற்ருெரு பெயர் உத்தமர்கோவில். இங்குச் சிவபெருமான் ஏந்திவந்த கபாலத்தில் அன்னமிட்டது லக்ஷ்மிதேவி என்று ஸ்தல வரலாறு கூறுகிறது.

பார்வதியே பிட்சையிட்டு அன்னபூரணி என்று பெயர் பெற்றுக் காசியில் கோவில்கொண்டிருக்கிருள்.

தஞ்சைமாவட்டத்திலுள்ள திருவலஞ்சுழி, க்ஷேத்ரபாலர் கற்றளியிலும் குடந்தை நாகேஸ்வரர் ஆலயத்திலும், கரந்தை, திருவையாறு, கண்டியூர், திருநெல்வேலி ஆலயம் ஆகிய இடங்களிலும் அழகிய பிக்ஷாடனர் திருஉருவைக் காணலாம்.

திருவெண்காட்டிற்குத் தெற்கே நான்கு மைலில் வலம்புரம் என்ற ஊர் இருக்கிறது. இங்குள்ள ஆலயத்தில் நூதன பிட்சாண்டவரைத் தரிசிக்கலாம். இவர் கையில் பிட்சைபாத்திரத்தைக்காணேம். வீணை வாசிப்பது போன்ற பாணியில் கைகள் இருக்கின்றன. பிட்சாடனக் கோலத்தில் வீணுதாரியாக வேறு எங்குமே இல்லை.

இந்தமாதிரி பிச்சை எடுக்கும் சிவபெருமானின் மனைவி ஒரு கொடைவள்ளல். பரஞ்சோதிமுனிவர் தன் திருவிளையாடற்புராணத்தில் மீனுட்சிஅம்பிகையைப்பார்த்து 'நீ கொடைவள்ளலாக இருக்கும் போது உன்கணவன் ஓடேந்தி பிச்சை எடுக்கலாமா?' என்று கேட்கிருர்.

குடங்கை நீரும் பச்சிலையும் இடுவார்க்கு இமையாக் குஞ்சரமும்
படங்கொள் பாயும் பூவணையும் தருவாய் மதுரைப் பரமேட்டி
படங்கொள்பாயும் பூவணையும் தருவாய் கையில் படுதலைகொண்(டு)
இடங்கள் தோறும் இரப்பாய் என்று ஏசுவாருக்கு என்பேசுவனே?

நமக்காக இறைவன் பிச்சை எடுக்கிருர். அவர் கேட்கும் அன்பும் ஆணவமும் எப்படியாவது நாம் பிச்சையாகத் தந்தால் தரட்டுமே என்று அம்பிகை தன்கணவனைப் பிச்சைஎடுக்க அனுமதித்திருக்கிருள். என்னே அவர்கள் கருணை!.

அருள்திரு. பாம்பன் அடிகளார்

'சித்தாந்தப் புலவர் மணி'

திரு. ந. ரா. முருகவேள் M. A., M. O. L.

முன்னுரை :

" ஆன்று அவிந்து அடங்கிய கொள்கைச் சான்றோர் பலர் யான் வாழும் ஊரே " என்று, சங்ககாலப் புலவர் பெருந்தகையாராகிய பிசிராந்தையார் பாடிச் சென்றார். அதற்கு ஏற்ப, நம் தமிழ் நாட்டில் தொன்றுதொட்டுத் தோன்றிவந்துள்ள சான்றோர்கள் பற்பலர். வாழையடி வாழையாக அங்ஙனம் தோன்றி வந்தருளிய சான்றோர்களின் வரிசையில், அண்மைக் காலத்தில் விளங்கியிருந்த பாம்பன் குமரகுருதாச சுவாமிகள் (கி. பி. 1860 – 1929) அவர்களும் ஒருவராவார்.

திரு. வி. க.

பாம்பன் சுவாமிகள், முருகனை வழிபடு கடவுளாகக் கொண்டவர். இவருடைய கனவிலும் நனவிலும் முருகப்பெருமானின் அருளைக் காட்டும் நிகழ்ச்சிகள் பற்பல நிகழ்ந்தன. தமிழ்த் தென்றல் திரு. வி. கல்யாணசுந்தரனார், சுவாமிகளின் அருள்பெற்ற மாணவர்களில் ஒருவராகத் திகழ்ந்தார்.

" பாம்பன் எனும் பதிமுளைத்த பவளக் குன்றே !
பழம்பாண்டித் தமிழ்ப்பொழிலே ! பண்பார் இல்லத்
தீம்பயிரே ! அன்புகொழி திரையே ! தெய்வத்
திறங்கண்ட அறநிலையே ! செகத்தில் உற்ற
கூம்பல்அற எழுகதிரே ! குழந்தை வேலன்
குகன்நெறியே நெறிஎன்ற குருவே ! நீதி
ஓம்புகஎன் றுரைத்தொழுகி உலகில் வாழ்ந்த
உயர்குமர குருதாச ஒளியே ! போற்றி "

என்பது, செந்தமிழ்ப் பெரும்புலவரும், தலைசிறந்த தேச பக்தருமாகத் திகழ்ந்திருந்த திரு. வி. கல்யாணசுந்தரனார் அவர்கள் சுவாமிகளைக் குறித்துப் பாடிய சிறந்ததொரு துதிப்பாடலாகும். இப்பாடலால் சுவாமிகளின் அருமை பெருமைகளை, அனைவரும் இனிது உணரலாம். சுவாமிகள், **தகராலய ரகசியம், பரிபூரணானந்தபோதம்,**

குமாரசுவாமியும், குமரவேள் பதிற்றுப்பத்தந்தாதி, திருப்பா, திருவலங்கற்றிரட்டு, சேந்தன் செந்தமிழ், செக்கர்வேள் செம்மாப்பு முதலிய பல நூல்களை அருளிச் செய்துள்ளார். சுவாமிகள் இயற்றிய **"சண்முக கவசம்"** என்னும் துதிநூல், பல்லாயிரக் கணக்கான முருகன் அடியார்களால், நாள்தோறும் பாராயணம்செய்து போற்றப் பெற்று வருகின்றது.

திருவலங்கற்றிரட்டு :

பாம்பன் சுவாமிகள் பாடியருளிய திருவலங்கற்றிரட்டு என்னும் பாடற்றொகுதி, முருகன் அடியார்கள் பெரிதும் போற்றிப் பயின்று பயனடைவதற்குரிய நூலாகும். இரண்டு காண்டங்களாக அமைந்துள்ள இந்நூல் 1263 பாடல்களாலாகிய 74 பிரபந்தங்களையுடையது. இவற்றுள் சில, பல தலங்களைப்பற்றிப் பாடப்பெற்றவை. எஞ்சியவையெல்லாம் பல்வேறு அரும்பெரும் பொருள்களை விளக்கி, கற்பவர்களின் அறிவையும் அன்பையும் வளர்க்க வல்லவைகளாகும். இந்நூலில் இறுதிப் பிரபந்தமாக அமைந்துள்ள **"திருவுருமலைக் கோமகன்"** என்பது பஞ்சவிம்சதியதிக சதபங்கியாய் (125 பாடல்களை உட்கொண்டதாய்) அமைந்துள்ளது. 64 சீர்கள் கொண்ட கலைச்சீர் கழிநெடிலடி யாசிரியவிருத்தமாய் எழும் இவ்வொரு செய்யுளே, 21 வஞ்சி விருத்தங்களாகவும், 24 வஞ்சித் துறைகளாகவும், 3 தரவு கொச்சகங்களாகவும், 14 கலிவிருத்தங்களாகவும், 14 கலிநிலைத் துறைகளாகவும், 3 கட்டளைக் கலித்துறைகளாகவும், 4 வெண்பாக்களாகவும், ஒரு நிலைமண்டில ஆசிரியப் பாவாகவும், 22 அறுசீர்க் கழிநெடிலடி யாசிரியவிருத்தங்களாகவும், 12 எழுசீர்க் கழிநெடிலடி யாசிரியவிருத்தங்களாகவும், 4 எண்சீர்க் கழிநெடிலடி யாசிரியவிருத்தங்களாகவும், 2 ஒன்பதின்சீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தங்களாகவும் கூடிநின்று, மொத்தம் 125 பாக்களாய் விரிந்து பொருள் பயப்பது, பெருவியப்பைத் தருகின்றது.

பல்சந்தப் பரிமளம் :

மேலும், இத் திருவலங்கற்றிரட்டின்கண் உள்ள பதிகங்கள் யாவும், தேவாரத் திருப்பதிகங்களிற் காணப்படும் பண்டைத் தமிழ்ப் பதிகங்களான் இயன்ற இன்னிசைப் பாக்கள் ஆகும். சிவபிரானைத் துதித்து மகிழ்தற்குப் பண் சுமந்த தேவாரப் பாசுரங்கள் அமைந்தாற் போல, முருகப்பெருமானைத் துதித்துப் போற்றுதற்கு இப்பதிகங்கள் பெரிதும் சிறந்தனவாக விளங்குகின்றன. அன்றியும் இதன் இரண்டாம் பகுதியில் உள்ள "பல்சந்தப் பரிமளம்" என்னும் நூல், யாப்பிலக்கண இலக்கியங்களில் ஏற்படுகின்ற ஐயப்பாடுகளை-

யெல்லாம் தீர்க்கவல்லதாக உள்ளது; சந்த பேதங்களையும், எதுகை மோனை முதலிய நயம் தவருமல் சித்திர கவிகள் இயற்றும் முறைகளையும் இனிது உணர்த்துகின்றது. முருகன் திருவருளே உய்திபெறுவோர்க்கெல்லாம் உயிர்த்துணை என்பதை உபதேசிக்கின்றது. இதனை,

" யாப்பின் இலக்கணமும் யாத்த இலக்கியமும்
யாப்பொலிபல் சித்திரமும் நச்சியல்போய் — முப்போது
அலங்கற் றிரட்டின்இரண் டாங்கண்டம் பார்உன்
விலங்கைத் தரித்து விடும் "

என்னும் செய்யுளால், சுவாமிகள் அவர்களே விளக்கிக் குறிப்பிட்டிருக்கின்றார்கள்.

சுவைமிகு பாடல்கள் :

இந்நூலின்கண் வரும் பாடல்கள் யாவும் உயரிய இனிய கருத்துக்களை நமக்குச் செவ்விதின் உணர்த்துகின்றன. அவற்றுள் ஒன்றிரண்டு பாடல்களை மட்டும் இங்குக் காண்போம். பெறுதற்கரிய மனிதப் பிறவியைப்பெற்ற மக்கள் நாம் அனைவரும் காமம், குரோதம், உலோபம், மோகம், மதம், மார்ச்சரியம் முதலிய தீய குணங்களால் அழிந்து போகாமல், அவற்றையெல்லாம் விலக்கிக்கொண்டு இறைவனின் இன்னருளைப் பெற்று உய்ய முயலுதல் வேண்டும் என்பதனைச் சுவாமிகள் சுவை மிகவும், அழகுறவும் நமக்கு அறிவுறுத்துகின்றார். இத்தீய குணங்களால் யார் யார் அழிவுற்றனர் என்பதைப் பின்வருமாறு இனிது எடுத்துக் காட்டியருள்கின்றார்.

இராவணன் பிறன்மனைவியைவிழைந்து அழிந்தான். **இரணியன்** துவேஷத்தால் அழிந்தான். **நரகாசுரன்** காமத்தால் மடிந்தான். **பகாசுரன்** குரோதத்தினால் இறந்தான். **துரியோதனன்**உலோபத்தால் ஒழிந்தான். **தசரதன்** மோகத்தால் உயிர்துறந்தான். **கார்த்தவீரியன்** மனச்செருக்கால் உயிரிழந்தான். **சிசுபாலன்** பொருமையால் ஆவி நீத்தான். **அருணட்சன்** தனக்குவரும் துன்பம் பிறருக்கு வருக என்று எண்ணி அழிந்தான். இவ்வாறே **புண்டரீகவசுதேவன்** என்பவன் பிறர் இன்புற்றிருப்பதா ? என்ற தீயநினைவால் மடிந்தான். **அம்பரீஷன்** ஆடம்பர குணத்தால் அழிந்தான். **சலந்தராசுரன்** எவரும் எனக்கு இணையில்லை என்னும் இறுமாப்பால் அழிந்தான். **மதுகயிடவர்கள்** அகங்காரத்தினால் அழிந்தொழிந்தார்கள்.

பரதார நசையால் **இராவணன்** பட்டனன் ;
பற்றிய துவேஷம் அதனுற்
பாறினன் **இரணியன்** ; படர்காமம் உற்றிறப்
பண்ணினன் **நரகாசுரன்**;

மருவிய குரோதத்தினலே **பகாசுரன்**
மடிந்தனன்; உலோபம் அதனல்
மாண்டனன் **அகித்துவசன்**; மோகம் ஒன்ருல் **இரா
மன் தந்தை** சென்ருன்; மதப்
பிரமையிற் **கார்த்தவீரியன்** உயிர் இழந்தனன்
பிழைமலி பொருமை ஒன்ருற்
பீடுகெழு **சிசுபாலன்** உள்ளாவி போன்றினன்
பேசுஇவை எலாம்உள்ள என்
சரிதை ஏதாமோ? எனத்துரால்கூர் எனது
தாபம் என்று இரியும்? எந்தாய்!
சலனம்அறும் மெய்ஞ்ஞான நிமல! சுக சன்னியாச!
சரவண பவானந்தனே! (1)

தனக்குவரு கின்றதுயர் பிறருக்கு வருகென்று
சந்ததம் நினைந்த **அருணுட்
சன்**, சடம்இழந்தான்; அதேவிதம் பிறர்சுகம்
சார்வதோ? என்னும் இயல்பின்
மனம்மிஞ்சி ஒரு **புண்டரீகவசு தேவனும்**
மடிந்தனன்; இடம்பம் ஒன்ருல்
வாழ்விழந்தான் **அம்பரீடன்**; இவண் எற்குஎவர்
சமானம்? என்னும் குணத்தால்
கனம்உள **சலாந்தரா சுரன்**உயிர் துறந்தனன்;
கதழ்வு அகங்காரம் அதனல்
கறுவும் **மதுகைடவர்** அழிந்தனர்; வரத்தொடு
கதித்த பலமும் பெருத்தும்;
தனகுஅற்ற இக்குணம் எலாம்உள்ள எற்குனது
சரணம் எப்படி எய்துமோ?
சலனம்அறும் மெய்ஞ்ஞான நிமல! சுக சன்னியாச!
சரவண பவானந்தனே! (2)

வழிபடு நெறியிற் பலபடிகள் :

நாம் இறைவனே வழிபட்டு உய்வதற்குப் பெரிதும் முயலுதல் வேண்டும். இறைவனை வழிபட்டு அவன் அருளைப் பெற்று உயர்தற்கு ஏழு (7) வகையான படிநிலைகள் உள்ளன. அப் படிநிலைகளில் நாம் ஈடுபட்டுப் பழகி நலம்பெற்று வாழ்தல் வேண்டும் என்று விரும்பி, சுவாமிகள் அவற்றைக் குறிப்பிடுகின்ருர். சிற்றினம் ஆகிய தீயவர்களின் சேர்க்கையை விலக்கி விடுவது முதற்படி. அறிவை வளர்க்கின்ற நல்ல நூல்களைப் பயின்று உணர்தல், இரண்டாவதுபடி.

மண் பெண் பொன் என்னும் மூன்று ஆசைகளையும் நீக்கிக் கொள்ளுதல், மூன்றாவதுபடி. நல்லவருடன் சேர்தல் முதலியன வற்றால் உயரிய உணர்ச்சிகளும் குறிக்கோள்களும் நம் உள்ளத்தில் மலரப்பெறுதல், நான்காவது படி. புலால் உணவை ஒழித்துப் பொறி புலன்களை அடக்கி நல்லொழுக்கம் கடைப்பிடித்தல், ஐந்தாவதுபடி. காண்போன் காட்சி காணப்படுபொருள் என்னும் பேத பாவனைகளை அகற்றிப் பேதமற்ற ஐக்கிய அத்துவித பாவனை உணர்வு எய்துதல், ஆறுவது படி. தற்பர சிவானந்தப் பொருளாகிய முழுமுதற் பெரும் பொருள் நிலைபெற்றிருத்தல் போல அதனுடன் நாமும் ஒன்றி இயைந்துநின்று இன்புறுதல், ஏழாவதுபடி. இந்த ஏழாவதுபடியை அணுகி அடைந்து இன்புற்று நிற்றலே, நம் வாழ்க்கையின் முடிந்த முடிவான பயனாகும்.

"துர்ச்சங்க வர்ச்சிதம் முதற்றலம் விவேகம்நுவல்
சுவடிகள் பயின்று பழகல்
துவிநிலம்; மூவேடணை துமித்திடுதல் மூன்றுளனச்
சொலும்நிலம்; உணர்ச்சி மலர்தல்
பொற்புறும் சதுர்நிலம்; பிசி மறுத்தே தவம்
புரிதல் ஐந்தாவது நிலம்;
போதநிகழ் திரிபுடி அவித்து, அத்துவிதமதர்வு
பூப்பது ஆறுவதுநிலம்;
தற்பர சிவானந்த வத்து நிலைநின்றவா
தானும் நின்றிடுவது ஏழாம்
தலம், என உணர்ந்தநான் ஏழ்என்னும் நிலையே
சாருமாறு உனை நம்பினேன்!
சற்சனர்கள் அடிகளே! அத்தைஅடை விழியைநீ
தரஎன்று கண்டுவப்பேன்
சலனம்அறும் மெய்ஞ்ஞான நிமல! சுக சன்னியாச!
சரவண பவானந்தனே!" (3)

எனவரும் இனிய நல்ல பாடலில் சுவாமிகள் இக்கருத்தை இனி தெடுத்து விளக்கியருளியிருக்கின்றார்.

முடிவுரை :

இத்தகைய இணையற்ற எழில்மிக்க பாடல்கள் பலப்பல, அருட்டிரு. பாம்பன் அடிகளார் நூல்களில் பெரிதும் நிரம்பியுள்ளன. அவற்றையெல்லாம் ஊன்றிக் கற்றுப் போற்றி உணர்ந்து உய்ய முயலுவோமாக!

உருத்திராக்ஷத்தின் தோற்றமும் அதன் பெருமையும்

பிரவசனரத்நம், வியாகரணசிரோமணி, இந்திவிசாரத்,

திரு. P. S. கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகள்

(மலர் 37, இதழ் 9, பக்கம் 375 இன் தொடர்ச்சி)

பதின்மூன்றுமுக ருத்திராக்ஷம்

இது தேவர்களின் தலைவனை இந்திரஸ்வரூபமாகும். சிவபுராணத்தில் இந்த உருத்திராக்ஷத்தை விச்வதேவ ஸதாசிவ ஸ்வரூபமெனச் சொல்லப்பட்டிருக்கிறது. இதன் மாலையை அணிந்துகொள்வதால் எல்லாவித எண்ணங்களும் கைகூடுகின்றன. இதன் மாலையால் ஓம் ஈம் யாம் ஆப ஓம் என்ற மந்திரத்தை ஜபிப்பவர் பாக்யசாலியாகிறார். தனதான்யப்பெருக்கு உண்டாகும். முக்காலங்களிலும் உள்ள பாவங்கள் அழியும். எல்லா தாதுக்களிலும் பௌதிக சித்தி ஏற்படும்.

அணியும் முறை

ஓம் ஈம் யாம் ஆப ஓம் என்பது மந்திரம்.

அஸ்யஸ்ரீ இந்திர மந்திரஸ்ய ப்ரம்மாரிஷி: | பங்மதி: சந்த: | இந்த்ரோ தேவதா | ஈம் பீஜம் | ஆப சக்தி: | ருத்ராக்ஷ தாரணார்த்தே ஜபே வி நியோக: | பிர்மா ரிஷயே நம: சிரஸி | பங்க்திச்சந்தஸெ நமோ முகே இந்த்ரதேவதாயை நமோ ஹ்ருதி | ஈம் பீஜாயநமோ குஹ்யே | ஆப சந்தயே நம: பாதயோ:

கரநியாசம்

ஓம் ஓம் அங்குஷ்டாப்யாம் நம: | ஓம் ஈம் தர்ஜநீப்யாம் ஸ்வாஹா | ஓம் யாம் மத்யமாப்யாம் வௌஷட் | ஓம் ஆப அநாமிகாப்யாம் ஹூம். ஓம் ஓம் கநிஷ்டி காப்யாம் வௌஷட் | ஓம் ஈம் யாம் ஆப ஓம் கரதலகரப்ருஷ்டாப் யாம் பட் |

அங்கநியாசம்

ஓம் ஓம் ஹ்ருதயாய நம: | ஓம் ஈம் சிரஸே ஸ்வாஹா | ஓம் யாம் சிகாயை வஷட் | ஓம் ஆப கவசாயஹூம் | ஓம் ஓம் நேத்ரத்ரயாய வௌஷட் | ஓம் ஈம் யாம் ஆப ஓம் அஸ்த்ராய பட் |

தியானம்

பீதவர்ணம் ஸஹஸ்ராக்ஷம் வஜ்ரபத்ம தரம்விபும் ।
ஸர்வாலங்கார ஸம்யுக்தம் நௌமீந்த்ராதிக மீச்வரம் ।

மஞ்சள் நிறமாயும் ஆயிரங்கண்கள் வாய்ந்தும் வஜ்ரம் தாமரை இவைகளை வைத்துக்கொண்டும் எல்லாவித அலங்காரங்களோடு கூடியும் ஸர்வவியாபியாயுமிருக்கிற இந்திரன் முதலிய தேவதைகளை வணங்குகின்றேன்.

பதினொன்றுமுக ருத்திராக்ஷம்

இது அனுமான் ஸ்வரூபமாகும். இது பரமேசுவரரின் ஸ்வ ரூபமுமாகும். இதன் மாலையைத் தினமும் தலையில் அணிந்துகொள் வதால் பரமேசுவரஸ்தானத்தை அடையலாம். இதன் மாலையால் ஓம் ஔம் ஹ ஸ்ப்ரேம் கப்ரேம் ஹஸ்ரௌம் ஹஸப்ரேம் என்ற மந்திரத்தால் ஜபம் செய்தால் முக்கால பாபமும் அழியும்.

அணியும்முறை

ஓம் ஔம் ஹ ஸ்ப்ரேம் கப்ரேம் ஹஸ்ரௌம் ஹஸப்ரேம் என்பது மந்திரம்.

அஸ்யஸ்ரீ ஹனுமந் மந்த்ரஸ்ய ராமச்சந்த்ர ரிஷி: । ஜகதீ சந்த: । ஸ்ரீ ஹநுமாந் தேவதா । ஔம் பீஜம் । ஹஸ்ப்ரேம் சக்தி: । அபீஷ்ட ஸித்யர்த்தே ஜபே விநியோக: ராமச்சந்த்ர ரிஷயே நம: சிரஸி । ஜகதீ சந்தஸே நமோ முகே । ஹநுமாந் தேவதாயை நமோ ஹ்ருதி । ஔம் பீஜாய நமோ குஹ்யே । ஹஸ்ப்ரேம் சக்தயே நம: பாதயோ: ।

கரநியாசம்

ஓம் ஓம் அங்குஷ்டாப்யாம் நம: । ஓம் ஔம் தர்ஜநீப்யாம் ஸ்வாஹா । ஓம் ஹஸ்ப்ரேம் மத்யமாப்யாம் வஷட் । ஓம் கப்ரேம் அநாமிகாப்யாம் ஹூம்। ஓம்ஹம்ஸ்ரௌம் கநிஷ்டிகாப்யாம் வௌஷட்। ஓம் ஹஸ்ப்ரேம் கரதலகரப்ருஷ்டாப்யாம் பட் ।

அங்கநியாசம்

ஓம் ஓம் ஹ்ருதயாய நம: । ஓம் ஔம் சிரஸே ஸ்வாஹா । ஓம் ஹஸ்ப்ரேம் சிகாயை வஷட் । ஓம் கப்ரேம் கவசாய ஹூம் । ஓம் ஹஸ்ரௌம் நேத்ரத்ரயாய வௌஷட் । ஓம் ஹஸ்ப்ரேம் அஸ்த்ராய பட் ।

தியானம்

உத்யந் மார்த்தண்டகோடி ப்ரகடசாரு வீராஸனஸ்தம்
மௌஞ்சீ யக்ஞோபவீதா பரணருசிசிகா சோபிதம்குண்டலாப்யாம்
பக்தாநாமிஷ்டதான ப்ரவணமநுதினம் வேதநாத ப்ரமோதம்
த்யாயேத்தேவம் விதேயம் ப்லவககுலபதிம் கோஷ்பதீபூதவார்த்திம்.

கோடி இளஞ்சூரியன்போல் உள்ளவரும், அழகியவீராஸநத்தில் வீற்றிருப்பவரும், முஞ்சப்புல்கயிறு பூணூல் அணிந்து ஆபரணம் அணிந்து அழகிய சிகையுடனும் காதணிகளுடனும் கூடியவரும், தினமும் பக்தர்களுக்கு வேண்டியதைக் கொடுப்பவரும், வேதஒலியால் மகிழ்ச்சியடைபவரும், குரங்குக்கூட்டத் தலைவருமாகிய தேவனைத் தியானம் செய்யவேண்டும்.

அணிவதில் பெருமை

1. ஒருமுகத்திலிருந்து 14 முகம் வரையில் உள்ள ருத்ராக்ஷங்களை அணியுமுன் மேலே கூறிய முறைப்படி மந்திரங்களை ஜபித்து, சிரத்தையுடன் வணங்கிச் சரீரத்தில் அணியவேண்டும்.

2. எல்லாத் தேவதைகளுக்குள் பரமசிவன் போலவும், நவக்கிரகங் களுக்குள் சூரியன் போலவும், கழுத்திலும் உடலிலும் ருத்ராக்ஷங்களை அணியும் மனிதர்கள் மனிதர்களுக்குள் சிறந்த வராகக் கருதப்படுகிறார்.

3. எந்த அன்பர் வீட்டில் ருத்ராக்ஷமிருக்கிறதோ எங்கு அது தினமும் பூஜிக்கப்படுகிறதோ அந்த பக்தர் எல்லாப்பக்தர்களுக் குள்ளும் சிறந்தவராகக் கருதப்படுகிறார். 21 தலைமுறையை அவர் கரையேற்றுகிறார். இம்மையில் எல்லாச் சுகங்களையும் அனுப வித்து மறுமையில் ருத்ரலோக வாசியாக ஆகிறார்.

4. அடையத் தகாத ஸ்திரீயை அடைவதாலும் பிரும்மஹத்தி செய்ததாலும் குருவின் இல்லாளைத் தீண்டியதாலும் ஏற்படக் கூடிய பாபங்களிலிருந்து ருத்ராக்ஷம் அணிபவர் விடுபடுகிறார். அவ்வாறே நாத்திகர், தர்மத்தைத் தூஷிப்பவர், கர்வங்கொண் டவர் இவர்கள்கூட ருத்ராக்ஷத்தை அணிவதால் பாபம் விலக்கப்பட்டு அழியாத நிலையை அடைகிறார்கள்.

5. மிலேச்சர்கள் சண்டாளர் கொடியபாபிகள் ஆகியோர்கள் ருத்ராக்ஷத்தை அணிந்தால் இறந்தபிறகு ருத்ரஸ்வரூபத்தை யடைகிறார்கள்.

6. இச்சந்தர்ப்பத்தில் திருமுருகர் தன் தந்தையாகிய பரமேச்வரரிடம் "கீழே குறிப்பிட்ட முறைப்படி மந்திரத்துடன் ருத்ராக்ஷத்தை அணிபவர்களும், மந்திர ஜபம் செய்யாமல் ருத்ராக்ஷம் அணிபவர்களும் எவ்விதபயனை அடைகிறார்கள்" என்று கேட்டார். அவருடைய கேள்விக்குப் பதில் சொல்லும் வகையில் சிவபெருமான் "தேவர்களில் சிறந்த கந்தனே! ருத்ராக்ஷத்தின் பெருமையை என்னைத்தவிர ஒருவரும் அறிய மாட்டார். ஆயினும் நீ என் பிரியமான குமாரன் என்ற காரணத்தால் மிக ரகஸ்யத்தைச் சொல்லுகிறேன்; கேள். மந்திரத்துடன் ருத்ராக்ஷத்தை அணிபவர் ருத்ரலோகத்தில் வசிப்பார். மந்திரமில்லாமல் அணிபவர் கொடிய நரகத்தில் வாழ்வார்" என்று அருளினார்.

7. ருத்ராக்ஷம் வெளுப்பு, சிவப்பு, மஞ்சள், கருப்பு நிறங்களில் இருக்கும். அவை முறையே அந்தணர் முதலிய நான்கு வர்ணத்தவர்களுக்குச் சொல்லப்பட்டிருக்கின்றன. ருத்திராக்ஷம் உருவத்திற்கேற்றபடி அல்பம் (சிறியது) நடுத்தரம் நீளமானது என்று வகுக்கப்படும். நீளமான ருத்ராக்ஷம் பயனளிக்கும். ருத்ராக்ஷம் எவ்வளவுக்கெவ்வளவு சிறிதாக இருக்கிறதோ அவ்வளவுக்கவ்வளவு பயன் குறையும்.

8. கெட்டுப்போயும் உடைந்துமுள்ள ருத்ராக்ஷங்களைப் பத்ராக்ஷம் என்று கருதவேண்டும். பத்ராக்ஷம் நீரில் மிதக்கும். ருத்ராக்ஷம் மூழ்கும். இதுதான் ருத்ராக்ஷ பத்ராக்ஷங்களைச் சோதிக்கும் முறை.

9. ருத்ராக்ஷத்தை அணிவதால் இரத்த அழுத்தம் சாதாரணரத்த அழுத்தமாக ஆகும். சாதாரண (Normal) ரத்த அழுத்தம் அதிகமாக ஆகாமலிருக்கும்.

10. இருதயசம்பந்தரோகமுள்ளவர் மண்பாத்திரத்தில் தண்ணீரை எடுத்துக்கொண்டு அதில் ருத்ராக்ஷத்தை 12 மணிநேரம் போட்டுவைத்துப் பிறகு அத்தண்ணீரைத் தினம் இருமுறை குடித்தால் அந்த ரோகத்திலிருந்து அவர் விடுபடுவார். திடீரென்று இருதயத்தில் வலி ஏற்பட்டால் ருத்ராக்ஷத்தைத் தேய்த்து (சந்தனம்போல்) அதைக்குடித்தால் பயன் ஏற்படும். சிறிதுநேரத்தில் வியாதி தெளியும்.

11. தாழ்ந்த ரத்த அழுத்தம் (Low blood pressure) உள்ளவர்கள் ருத்ராக்ஷத்தை அணியவேண்டியதில்லை. மேல் 10-ல் குறிப்பிட்ட முறையைப் பின்பற்றலாம்.

12. உயர்வு இரத்த அழுத்த ரோகமுள்ளவர் ருத்ராக்ஷ மாலையைத் தலையில் வைத்துக்கொண்டு அதன்மேல் ஜலம்பட்டுவிழும்படி ஸ்நானம் செய்க. இவ்வாறு செய்தால் அது சாதாரணமாக ஆகிவிடும்.

13. தற்காலம் கடைகளில் ஒருமுக, இருமுக ருத்ராக்ஷங்களை விற்கிறார்கள். உண்மையில் ருத்ராக்ஷ வியாபாரி இருமுகருத்ராக்ஷத்தைப் பிளந்து அதன் ஒருமுகத்தைத் தேய்த்துவிட்டு இரண்டையும் சேர்த்துவிடுகிறார்கள். ஏனெனில் ஒருமுக ருத்ராக்ஷம் கிடைப்பது அரிது.

ஸ்ரீ

பார்வையாளர் குறிப்பு

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம்

திருவையாறு, ஸ்ரீ பஞ்சநதீசுவரசுவாமி தேவஸ்தானம்.

திருவையாறு ஸ்ரீ ஐயாறப்பனைத் தரிசித்தேன்; வழிபட்டேன்; அர்ச்சகர் நிர்வாகி ஆகியோரின் அன்பைப் பெற்றேன். கோயிலின் தூய்மை என்னைக் கவர்ந்தது. தெய்வநெறி தழைப்பதாக!

(ஒ-ம்) ம. பொ. சிவஞானம்,

13—7—78. மேலவைத் தலைவர், தமிழ்நாடு அரசு.

* * * *

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம்

திருப்பனந்தாள், ஸ்ரீ அருணஜடேசுவரசுவாமி தேவஸ்தானம்.

தருமையாதீனம் ஸ்ரீ குருஞானசம்பந்தர் இறைபணி மன்றத்து அங்கத்தினர்கள் சுற்றுலா வழிபாடு 17—7—78 உச்சிக்காலத்தில் மிகச்சிறப்பாக இத்தலத்தில் நடந்தது. திருக்கோயில் நிர்வாகியும் அர்ச்சகர்களும் கோயில் இறைபணியாளர்களும் கோயில் வரலாறு கூறி, சிறப்பாக வழிபாடு செய்துவைத்தது மிக்க மகிழ்ச்சிக்குரியது. தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமணி அவர்கள் அருள்பாலித்து எல்லா ஏற்பாடுகளும் செய்துகொடுத்தமைக்குப் பணிவான நன்றி.

(ஒ-ம்) ராம. ஏகப்பன், இறைபணிமன்றத் தலைவர்.

(ஒ-ம்) பாலசுப்பிரமணியன், அமைப்பாளர்.

வினைப் பலன்கள்

வினை உடனடியாகவும் பயன் தரும் - காலந் தாழ்த்தும் பயன் தரும். கீரை, வாழை, தென்னை, பனை இவை பயன் தரும் கால அளவை உற்று நோக்க வேண்டும். கீரை ஒருமாதத்தில் பலன் தரும். வாழை ஓராண்டில் பலன் தரும். தென்னை ஐந்து ஆண்டில் பலன் தரும். பனை இருபது முப்பது ஆண்டு கழித்துப் பலன் தரும். அதுபோல வினையின் ஆற்றலுக்குத்தக அதுபயன் விளைக்கும்.

சிறு குற்றங்களுக்கு உடன் தண்டனை தரப் படுவதும், பெருங் குற்றங்களுக்கு நெடுநாள் விசாரித்துத் தண்டனை தருவதும் உலகியலிலும் உண்டு. அதுபோலத் தீவினை மிகமிகத் தண்டனை மெதுவாகவரும். பல்வேறு பிறவிகட்குப் பின்பும் தண்டனையை இறைவன் தந்தே தீருவான்.

வலுவில்லாதநோயாளிக்கு வலிமை உண்டாக் கிப் பின் அறுவை சிகிச்சை செய்வது உலகியல். அதுபோலச் சில உயிர்களை வளரவைத்துத் தண்டனை தருகிறுன் இறைவன்.

'நல்வினையாயினும் தீவினையாயினும் அவ னவன் அனுபவித்தே தீரவேண்டும். 'கொன்ருல் பாவம் - தின்ருல் தீரும்' என்பதொரு பழமொழி தமிழ்நாட்டில் வழங்கி வருகிறது. அது புலால் உண்பதுபற்றி எனப் பலர் நினைக்கிருர்கள். அது வினைபற்றியபழமொழி. 'தின்ருல்' என்பது இங்கே 'அனுபவித்தால்' என்ற பொருளில், 'பாவத்தை அனுபவித்தல்லது தீர்த்தல் இயலாது' என அறிவுறுத்துகிறது. தண்டனைகள் திருத்தத்திற் காகவே! 'நல்ல குருநாதன் நம்மை வருத்துவது - கொல்ல அல்ல; பொல்லாக்குணம் போக்க' என்பது பழம்பாட்டு.

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம்
26 ஆவது குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

நன்றி. —பாலஜோதிடம். 1—8—78.

தருமையாதீனம்

வேளூர் ஸ்ரீ வைத்தியநாதசுவாமி தேவஸ்தானம்,

வைத்தீசுவரன்கோயில், சீகாழி வட்டம், தஞ்சை மாவட்டம்.

திருவிளக்கு அறக்கட்டளை நிதி

காணிக்கை செலுத்தியவர்களின் பெயர் விபரமும்
மாயூரம் இந்தியன் வங்கியில் உள்ள முதலீடுகள் விபரமும்.

(மலர் 37, இதழ் 4, பக்கம் 212 இன் தொடர்ச்சி)

172	உண்டியல் நிதி ரூ. ...	1000
173	ஷை ...	1000
174	ஷை ...	1000
175	ஷை ...	1000
176	ஷை ...	1000
177	திருமதி. கமலம் W/o சம்பந்தம், சீகாழி ...	1000
178	திருமதி. R. கமலம் இராமமூர்த்தி, மாதிரிமங்கலம் ...	1090
179	திரு. K. M. தங்கவேல் பிள்ளை, பெண்ணாகடம் ...	1001
180	உண்டியல் நிதி ...	1000
181	ஷை ...	1000
182	ஷை ...	1000
183	ஷை ...	1000
184	ஷை ...	1000
185	ஷை ...	1000
186	ஷை ...	1000
187	திரு. பழனியப்பன், திருச்சி ...	1000
188	திரு. K. குப்புசாமி முதலியார் & திரு. R. ஜெயராம அய்யர், பாண்டிச்சேரி ...	1001
189	திரு. J. கோதண்டராமன், புஞ்சை கிடாரங்கொண்டான்	1000
190	கல்பாக்கம், D. A. E. டவுன்ஷிப் வாசிகள்	1181-75
191	ஷை ...	1000
192	Dr. திரு. S. நாகேஸ்வரன், மைலாப்பூர், சென்னை-4	1000
193	உண்டியல் நிதி ...	1000
194	ஷை ...	1000
195	ஷை ...	1000
196	ஷை ...	1000
197	ஷை ...	1000
198	ஷை ...	1000
199	ஷை ...	1000
200	ஷை ...	1000
201	திரு. P. V. இராமன், சென்னை - 17. ...	1000

சிறுகதை :

சத்தியம் கரைந்தது

வித்துவான், திருமதி. ப. நீலா எம். ஏ.

அன்று கல்லூரி விடுமுறை. ஓய்வாக எதையாவது புரட்டிக் கொண்டிருக்கலாம் என்று என் அலுவலக அறையில் நுழையும்போது வாசல் அழைப்புமணி ஒலித்தது. இன்று ஓய்வை அனுபவித்தால் போல்தான் என்று சலித்துக் கொண்டே கதவைத் திறந்தேன். கல்லூரிப் பணியாள் கதிர்வேலு கையில் கட்டுத் தாள்களுடன் நின்றிருந்தான்.

'என்னப்பா வேலு! இன்றும் பொங்கலா' என்றேன் கண் சிமிட்டிக்கொண்டே. பொங்கல் என்றால் எங்கள் ஆசிரியர் வட்டாரத்தில்தான் புரியும். அதாவது எங்கள் தமிழ்த்துறைத் தலைவர் எங்களை 'அரிசி பொங்கலில் குழைந்துள்ளதுபோல்' குழையக் குழைய வேலைவாங்கிவிடுவார். வேலைநாட்களில். சிவனே என்று அவர் சொன்னதைச் செய்துவிட்டுப் பின் ஒருவரை ஒருவர் பார்த்து 'மனுஷன் சும்மா ஆளைப் பொங்கல்பண்ணிவிட்டார் சார்' என்று அங்கலாய்த்துக் கொண்டோம்.

கதிர்வேலு பேருக்குத்தான் ப்யூனே தவிர முக்கால்வாசி அவன் ஆசிரியர்தான். எங்கள் வட்டாரப் பேச்செல்லாம் அத்துப்படி. அவன் என்னைச் சமாதானப்படுத்துவதுபோல் 'அதெல்லாம் ஒண்ணுமில்லே சார், ஒருசின்ன ஓர்க்தான். உங்களுக்கு அஞ்சே நிமிஷ வேலை' என்று கூறிக்கொண்டே பேப்பர் கட்டை மேசையில் வைத்தான்.

நான் அவன் கூறியதைக் காதில்போட்டுக்கொள்ளாமல், எத்தனை பேப்பர் இருக்கும் என்று அனுமான அளவையில் புத்தியைச் செலுத்தியபோது, அவன் கூறினான் - 'ஒன்றுமில்லேசார், பார்த்தசாரதி எல்லாத்தையும் பார்த்துட்டார். அவருக்கு நீங்களும் பார்த்து 'எஸ்'ன்னுட்டா ஒரு திருப்தியாம். அதுதான் கட்டுரைப் போட்டித் தாள்களை அனுப்பிச்சுட்டார் உங்களிடம்' என்றான்.

கதிர்வேலு உரிமையாகப் பெயர் சொன்ன Dr. M. பார்த்தசாரதி M. A. Ph. D. எங்கள் தமிழ்த்துறைத் தலைவர். அவன் கண்முன் படித்து அங்கேயே முன்னுக்குவந்த உரிமையால் அவன் பெயரிட்டு எளிமையாகக் கூறிவிட்டான். எங்களால் அப்படி முடியுமா! 'M. P. சொன்னார்' - 'கேட்டார்' என்றுதான் அவரைக் குறிப்பிடுவோம்.

ஆனால் மனுஷன் கண்டிப்போடு கருணையும் உடையவர். அதுவும் சொல்லப் போனால் மாணவர்களால் ' திரிபுண்டரம் ' என்று செல்லமாக அழைக்கப்படும் (ஆமாம் - என்பட்டை விபூதியால் அவர்கள் எனக்கிட்ட பெயர் அது) என்னிடம் அவருக்கு அலாதி மதிப்பும் பிரியமும் உண்டு. ' Mr. மாணிக்கவாசகன் ' என்று வாய் நிறைய அழைப்பார். மற்றவர்கள் ' மாணி ' என்றழைப்பதைக் கேட்டிருந்துங் கூட.

கதிர்வேலு இன்னும் இடத்தைவிட்டு நகரவில்லை என்பதை அவனுடைய ' அலாரம் இருமல் ' நினைவுபடுத்த அவனைத்திரும்பிப் பார்த்தேன். " சார், இதெல்லாம் எம். ஏ., பர்ஸ்டு இயர்ஸ் டுடன்ஸ் கட்டுரையாம். அவரே முதல் இரண்டாம் பரிசுகளை ' ஸ்டடி ' பண்ணிட்டாராம். உங்களையும் ஒரு முறை பார்க்கச் சொன்னார். அப்போ நான் வரட்டுமா " என்று கேட்டுக்கொண்டே போய் விட்டான்.

நான் மேலே சிகப்பு மையினால் I st Rank என்று குறிப்பிடப் பட்டிருந்த கட்டுரையைக் கையிலெடுத்தேன். கட்டுரைத் தலைப்பு ' திருவாசக உவமைத்திறன் ' - என்றிருந்தது. I st Year M. A., வகுப்பிற்கு நான்தான் திருவாசகம் எடுப்பேன். அதனால் அதில் ஈடுபாடுகொண்ட - அதாவது வகுப்பில் அப்பாட வேளையில் அமர்ந்திருக்கும் எல்லாரையும் எனக்குத் தெரியும். பல முறைகளில் அவர்களின் கையெழுத்துக்களுங்கூட எனக்கு அறிமுகமே. ஆனால் I st Rank கட்டுரையைப் பார்த்துக் கையெழுத்தின்மூலம் அதற்கு உரியவனை, என்னால் அடையாளம் காணமுடியவில்லை. அப்போ... வகுப்புக்கு வராதவர்களில் யாருடையதாகவேனும் இருக்குமோ! அப்படிப் பார்த்தால் அவர்களில் சதீஷ்தான் கொஞ்சம்...... கொஞ்சமென்ன நல்ல இன்டெலிஜென்ட் ஸ்டுடன்ட். ஆனால் என்னைக் கேட்டால் அவனை அப்படிச் சொல்லமாட்டேன். காரணம் தெய்வ விஸ்வாசமில்லாத அவன் படிப்பு எதற்கும் உதவாது என்பதால். ' ஆமாம்... பொல்லாத படிப்பு... எங்கானும் மோதிண்டுதான் சார் இவனுக எல்லாம் திரும்புவான்கள் ' என்பேன் எரிச்சலுடன்.

சத்யம் என்று அப்பா அம்மா பேர் வைத்து, அதைக் காப்பாத்துவான்னு ஆளையும் வளர்த்து விட்டுட்டா. இவன் என்னடான்னா *' ஏழுரைரூபாய் ' செலவில் சதீஷ் ஆயிட்டானே ! காலம் அப்படிக் கெட்டுப் போச்சு. இவனைச் சொல்லி என்ன குத்தம் என்று ஒரு லெக்சர் அடித்துவிட்டுத்தான் ஓய்வேன்.

---

* அரசாங்கத்திற்கு - பெயர்மாற்றம் செய்வதற்காகக் கட்ட வேண்டிய பணம்.

எங்கோ சென்ற நினைவைப் படபட என்று பறந்த கட்டுரைத் தாட்கள் இழுத்துவந்தன. 'சரி, யாருதா இருந்தா என்ன? பர்ஸ்டு ராங்கிற்கு யோக்கியதை இருக்கான்னுதானே பார்க்கணும்' என்று கூறிக்கொண்டே கட்டுரையில் கண்ணை ஓட்டினேன்.

கட்டுரையின் முதல் வாக்கியமே என் கவனத்தை இழுத்துப் பிடித்துவிட்டது. திருவாசக உவமைத் திறனையா, திருவாசகத்திற்குத் தந்த உவமையின் திறனையா! எதை முதலில் ஆய்வது என்று முத்துக்களை உருட்டியதுபோல் அழகாக எழுதி நான்கு புள்ளிகள் இடப்பட்டிருந்தன.

நான் சொல்லித் தந்த பாணியிலேயே கட்டுரையின் தொடக்கம் அமைந்திருக்கவே எனக்கு மேலே படிக்க ஆவல் எழுந்தது. நான் வகுப்பில் அடிக்கடி கூறுவேன், 'செய்தி பழையதாக இருக்கட்டும் நீங்கள் புதுமையான உறைபோட்டு - அதனை விற்பனை செய்யுங்கள்' என்பேன். அதாவது பொழுது விடிந்தது என்பதை, நிலமங்கை தன் மேனி மூடியிருந்த கரும்போர்வையை மெதுவாக விலக்கிவிட்டு ஆதித்தனின் ஆதிக்கம் ஆரம்பமாயிற்றோ என்று தலைதூக்கிப் பார்த்தாள். இப்படி எழுதுவது, பலபல மேற்கோள்களை இணைப்பது போன்ற உத்திகள் எல்லாமே தேர்வுக் களத்தில் உங்களைச் சுமக்கும் அத்திகளாகும்' - இப்படியெல்லாம் மார்க் வாங்க வழி கூறுவேன்.

இப்போ 1 st Rank கட்டுரையைத் தொடர்கிறேன். " கலங்களைப் பலவகை உலோகங்களில் செய்யக் காண்கிறோம். பொன், வெள்ளி, தாமிர, ஈயபாத்திரங்களுக்கு அதிக மதிப்புண்டு. ஏழை எளியவர்கள் பெரும்பாலும் பித்தளைப் பாத்திரங்களையே பயன்படுத்துவதை நடைமுறையில் கண்டுவருகிறோம். மண்பாண்டம். இது சமூகத்தின் கடைசிப் படியிலன்றோ இருக்கிறது. பார்க்கப்போனால் மட்பாண்டங்கள் சமையல் கலங்களாக இருப்பதே உடலுக்கு நல்லது என்றாலும் கௌரவம் காரணமாக அவைகளை நாம் ஒதுக்கிக்கொண்டே வருவதைச் சொல்லித்தான் ஆகவேண்டும்.

இப்போது பழக்கத்திலுள்ள பிளாஸ்டிக் அலுமினியப் பாத்திரங்கள் சூடான உணவு வகைகளால் பாதிக்கப்படக்கூடியன அவைகளில் வைத்து உண்ணுவதால் கேடும் வருகிறதாம். இவ்வளவு கேடுகளுக்கிடையிலும் அவைகள் மலிவாகவும் கவர்ச்சியாகவும் இருக்கும் காரணமோ என்னமோ - நாம் அவற்றைக் கைவிடத் தயாராக இல்லை.

மண்பாண்டங்களை உபயோகிக்கும் வகையில் சில கஷ்டங்கள் இருக்கத்தான் செய்கின்றன. அதாவது ஒருவர் எச்சில் செய்த

மண்கலம் மற்றவர் பயன்படுத்த அருவருப்புத் தருவதாக இருக்கிறது. வடநாட்டில் சிறுசிறு மண் கிண்ணங்களில் தேநீர், லச்சி (தயிரும் சர்க்கரையும் கலந்து ஐஸ் போட்டுத் தருவது) இவைகளை விற்பதன் நோக்கம் பயன்படுத்தியபின் தூர எறிந்துவிடலாம் என்பதே. எச்சில் என்ற ஒன்று மற்றவர்களைப் பாதிக்காதபடி இருக்க இது உதவுகிறது.

பழைய இலக்கியங்களில் ஏழ்மையான வாழ்க்கையைச் சுட்டும் போது 'முரிவாய்ப்பானை'யில் உணவு சமைத்தனர் என்பர். பானை என்றாலே போதும் - பின்னும் முரிவாய் என்பதால் இழிந்த இரக்கமுள்ள வாழ்வு புரிகிறது.

தஞ்சைவாணன் கோவை யுரையில் சொக்கப்பநாவலர் "களவு" என்ற ஒழுக்கத்தைத் தலைவி தள்ளவும் மாட்டாமல் கொள்ளவும் மனமின்றி இருக்கும் நிலையைப் 'புலையன் தொடு தீம்பால்' போல என்பார். புலையனும் மட்கலமும் பாலைக் கொள்ளத் தடையாயின. 'தீம்பால்' விரும்பும் உள்ளம் தடையைத் தாண்டிவிடுவது போல 'களவை' த் தலைவி ஏற்றாள்" எனவருகிறது.

மட்கலம் இவ்வாறு பலரால் தீண்ட வகையற்றதாய், ஒருவர் பழக்கத்தில் வந்துவிட்டால் அவரே பயன்படுத்த வேண்டும் என்ற நிலையில் உள்ள தன்மை இப்போது விளங்கியிருக்குமே! ஆனால் பொற்கலம் நேர்மாறானது. இப்படிப்பட்ட வரையறை கிடையாது. யாவருக்கும் பொதுவாய் - விருப்பம் கொள்ளத்தக்கதாய் - பயன்படுத்தத் தடையற்றதாய் அது இருப்பதையும் உடன் எண்ணுக.

இந்த இரண்டும் ஓர் அற்புதக் கருத்தை விளக்குதற்குப் பயன்பட்டமையை நினைவூட்டவே இத்துணை முன்னுரை. (தொடரும்)

கடிதம் :

புலவர், நாகசண்முகம்

ARUL NILAYAM
Publishers And Book Sellers
35. Mannar Reddy Street. Madras 600 017.

* தெய்வத் திருவுருவே! பாலஜோதிடம் இதழில் மலர்ந்துள்ள தங்கள் பொன்னுரையைக் கண்டேன். அழகான - அழுத்தமான - ஆழமான - துல்லியமான - தூய்மையான - வாய்மையான - எண்ணி எண்ணி வியந்து போற்றத்தக்க அருளாசியாக ஒளிர்கின்றது. தருமை ஆதீனம் தமிழ் ஆதீனமன்றோ! தமிழன்னை தமிழக மக்களுக்கு வழங்கிய வரப்பிரசாதமாக மிளிர்கின்றது. 1—8—78.

திருமுருகப்பெருமான் தசபங்கி

(ஒருபது பாவிரி ஒருபா)

தேவிதாசன். திரு. ஐ. கோ. இராமநாதன்

கோவை.

பன்னிருசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருமுரு காசிவ ஞர்மக னேநிறை தேசுள வாநானம்
திகழ்குற மானின் மகிணு நலமிளி ரறுமுக சுந்தரனே
பெருகிய சீரடி யார்புக லேமறை பேசிய வாகானம்
பிழிதுதி தாமம் மகிழ் வோய் கலைபொழி யறிவுத வுந்துணையே
அரியய ஞேர்பர வோர்பர னேயுறை யாசிரி யாமோனம்
அரனுற வேமுன் மொழிவோய் உலகுய அறுதலம் வந்தனையே
மரகத மாமயில் மேல்வரு வாயறை மாசிரி யேஞானம்
வளமளி நாளுங் குமரா நிலையுள நிறைநகை தந்தனையே.

[இப்பாடலிலிருந்து விரியும் பத்துத் தனிப்பாடல்களாவன]

சிந்தடி வஞ்சி விருத்தங்கள்

திருமுரு காசிவ ஞர்மகனே
பெருகிய சீரடி யார்புகலே
அரியய ஞேர்பர வோர்பரனே
மரகத மாமயில் மேல்வருவாய். (1)

நலமிளி ரறுமுக சுந்தரனே
கலைபொழி யறிவுத வுந்துணையே
உலகுய அறுதலம் வந்தனையே
நிலையுள நிறைநகை தந்தனையே. (2)

கட்டளைக் கலித்துறை

திரு முரு காசிவ ஞர்மக னேநிறை தேசுளவா
பெருகிய சீரடி யார்புக லேமறை பேசியவா
அரியய ஞேர்பர வோர்பர னேயுறை யாசிரியா
மரகத மாமயில் மேல்வரு வாயறை மாசிரியே. (3)

கொச்சகக் கலிப்பா

தேசுளவா நானம் திகழ்குறமா னின்மகிணு
பேசியவா கானம் பிழிதுதிதா மம்மகிழ்வோய்
ஆசிரியா மோனம் அரனுறவே முன்மொழிவோய்
மாசிரியே ஞானம் வளமளிநா ளுங்குமரா. (4)

கலி விருத்தம்

நானம் திகழ்குற மானின் மகிணு
கானம் பிழிதுதி தாமம் மகிழ்வோய்
மோனம் அரனுற வேமுன் மொழிவோய்
ஞானம் வளமளி நாளுங் குமரா. (5)

அறுசீர் ஆசிரிய விருத்தம்

நிறைதே சுளவா நானம் திகழ்குற மானின் மகிணு
மறைபே சியவா கானம் பிழிதுதி தாமம் மகிழ்வோய்
உறையா சிரியா மோனம் அரனுற வேமுன் மொழிவோய்
அறைமா சிரியே ஞானம் வளமளி நாளுங் குமரா. (6)

எழுசீர் ஆசிரிய விருத்தம்

நானம் திகழ்குற மானின் மகிணு நலமிளி றறுமுக சுந்தரனே
கானம் பிழிதுதி தாமம் மகிழ்வோய் கலைபொழி யறிவுத வுந்துணையே
மோனம் அரனுற வேமுன் மொழிவோய் உலகுய அறுதலம் வந்தனையே
ஞானம் வளமளி நாளுங் குமரா நிலையுள நிறைநகை தந்தணையே. (7)

குறளடி வஞ்சி விருத்தங்கள்

நிறைதே சுளவா
மறைபே சியவா
உறையா சிரியா
அறைமா சிரியே (8)

அறுமுக சுந்தரனே
அறிவுத வுந்துணையே
அறுதலம் வந்தனையே
நிறைநகை தந்தணையே. (9)

நேரிசை வெண்பா

தேசுளவா நானம் திகழ்குறமா னின்மகிணு
ஆசிரியா மோனம் அரனுறவே — பேசியவா
கானம் பிழிதுதி தாமம் மகிழ்குமரா
ஞானம் வளமளிநா ளும் (10)

குறிப்புரை :- நானம் - புழுகு மணம்; குணிப்பெயர் குணத்தை யுணர்த்திற்று. குறமான் - வள்ளிப்பெருமாட்டி. தாமம் - மாலை. மகிணன் - கணவன். அறுதலம் - ஆறுபடைவீடு. மாசு - குற்றம்; பாவம். இரி - அகற்று. நிலையுள நிறை நகை - அந்தமில் இன்பத் தழிவில் வீடு. (கணப்பை நல்கி, அல்லது அணிகலை அளித்து அணைத்தருள் என்ற அகப்பொருள் தொனித்தது.)

'கவித்தென்றல்'

சிதம்பரம், ஸ்ரீ உ. ர. உமாநாத தீக்ஷிதர்

ராகம் - சாருகேசி. தாளம் - ஆதி.

பல்லவி

அமரநாதனைக் காணவே ஆர்வமே கொண்டிடுவாய்
அவனருள் கிட்டிவிடும் உன் ஆர்வமும் பலித்துவிடும் (அமர)

அ. பல்லவி

மனித்த பிறவி கிடைத்த பெருமை மதிக்கவேண்டாமா
இனியும் பிறவி எடுக்காததற்கு எத்தனம் வேண்டாமா (அமர)

சரணம் I.

ஆசை பாசம் அவாவினை அறுத்து ஆனந்தம் கொண்டுவிடு
அன்பினிலே ஆடும் ஆண்டவனைக் கண்டுன் அல்லலை போக்கிவிடு
பெருமலை ஏறிநின் மூச்சினை அடக்கி உயர்நிலை எய்திவிடு
பெருமானை எண்ணி அவனையடைய ஓர் வழியினைக்கண்டுவிடு (அமர)

சரணம் II.

காடுமலை மேடுபள்ளம் கடும் குளிரையும் தாங்கி
கால்நடுக்கும் பனிப்பாறையிலே கண்ணீரையும் சிந்தி
கரைபுரளும் மலைதவழும் அமரகங்கையிலே மூழ்கி
கண்ணிமையில் மின்னொளியாய் காட்சிதரும் முழுநிலவில் (அமர)

பார்வையாளர் குறிப்பு

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம்

சீகாழி, ஸ்ரீ சட்டைநாதசுவாமி தேவஸ்தானம்.

கோவையில் அமைந்துள்ள சமய சமுதாய சேவை செய்துவரும் தருமையாதீன ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்தர் இறைபணி மன்ற அங்கத்தினர்களுடன் சீகாழி தலவழிபாடு 18—7—78 அன்று மிக சிறப்பாக நிகழ்ந்தது. இத்திருத்தல நிர்வாக அதிகாரிகளும் இறைபணியாளர்களும் திருக்கூட்டத்தினரை நன்கு உபசரித்து, தலவிபர உரைகளைக் கூறி மக்களை மகிழ்வுக்கடலில் திளைக்கச்செய்தனர். ஆதீனத் திருக்கோயில்களில் இதுவும் ஒன்று. சுத்தமாக - தெளிவாகப் பரிபாலிக்கப் படுகிறது.

R. சண்முகம், காப்பாளர், M. பாலசுப்பிரமணியன்,
சு. காளியப்பன் ,, அமைப்பாளர்.

செய்திகள்

தருமையாதீனம்

ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களின் ஜன்மநக்ஷத்திர விழா வழிபாடு

4—8—78 வெள்ளிக்கிழமை ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களின் ஜன்மநக்ஷத்திரத் திருநாள். திருவையாறு ஸ்ரீமத் சுந்தரலிங்கத் தம்பிரான் சுவாமிகள் தலைமையில் வழிபாட்டுக் குழுவினர் காலை 8-மணிக்கு அன்பர்கள் பலர் வரவேற்கத் திருவேதிகுடி சென்றனர். திருவேதிகுடி நான்கு வீதிகளிலும் சிவபுராண பாராயணங்களுடன் திருவீதிஉலாவந்து திருக்கோயிலை அடைந்தனர். பேராசிரியர் திரு. சுவர்ணகாளீஸ்வரன் ஆதீனக்கல்லூரிமுதல்வர் திரு. வி. சா. குருசாமி தேசிகர் எம். ஏ., திருக்கருகாவூர் சிவஞானம் ஆகியோர் சொற்பொழி வாற்றினர். நண்பகல் 12-மணிக்கு அபிஷேக ஆராதனைகளுடன் சிறந்த முறையில் வழிபாடு நடைபெற்றது. தலத்திருப்பதிகம் பாராயணம் செய்யப்பட்டது. திரு. சௌந்தரகாசம் பிள்ளை அவர்கள் அன்பர்கள் அனைவருக்கும் மாகேசுவரபூசை செய்வித்தார்கள்.

மாலை 6 மணிக்கு, திருச்சோற்றுத்துறையில்வழிபாடு. அன்பர்கள் நான்கு வீதிகளிலும் சிவபுராண பாராயணம்நிகழ்த்தித் திருக்கோயிலை அடைந்தார்கள். பேராசிரியர் திரு. சுவர்ணகாளீசுவரன், பேராசிரியர் திரு. கோபாலய்யர் ஆகியோர் சொற்பொழிவாற்றினர். திருவையாறு செய்தியாளர் திரு. வேங்கடராமச் செட்டியார் வரவேற்புரை கூறினர். திருவையாறுதேவஸ்தானம் கண்காணிப்பாளர் திரு. கிருஷ்ணமூர்த்தி முதலியார் நன்றியுரை கூறினர். சுவாமி அம்பாளுக்கு விசேஷ அபிஷேக ஆராதனைகள் செய்விக்கப்பெற்றன. தலத்திருப்பதிகங்கள் ஓதப்பெற்றன. வாரவழிபாட்டுக் கழகத் தலைவர் அவர்கள் அன்பர்களுக்குச் சிற்றுண்டிகள் வழங்கி வரவேற்றார்.

தருமையாதீனத்தில் கயிலாய தரிசன நினைவுநாள் விழா

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம் 25 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் திருக்கயிலாய மலையைத் தரிசித்து மீண்டதை

அனைவரும் அறிவர். அத்தரிசன நினைவுநாள் விழா ஆண்டுதோறும் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. திருக்கயிலாய தரிசனத்தின் 19 ஆவது ஆண்டுவிழா 3—8—78 வியாழக்கிழமையன்று 26 ஆவது குருமகாசந்நிதானம் அவர்களின் அருளாணையின்வண்ணம் சிறப்பாகக் கொண்டாடப்பெற்றது. அன்று சொக்கநாதப் பெருமான் பூஜை மடத்தில் திருக்கயிலாயத் திருவுருவப் படத்திற்குக் காலை மாலை இரு வேளைகளிலும் சிறப்பு வழிபாடு நிகழ்த்தப்பட்டது. திருமுறைப் பாராயணம் அகண்ட பாராயணமாக நிகழ்த்தப் பெற்றது. நண்பகலில் மாகேஸ்வரபூஜை நடைபெற்றது. அன்று மாலையில் சமயவிரிவுரைகள் நிகழ்ந்தன. வித்துவான் திரு. மு. ஆறுமுக தேசிகர், வித்துவான் திரு. வி. சபேசன், வித்துவான். திருமதி ப. நீலா M. A., திரு. மு. சிவச்சந்திரன் M. A. திரு. கா. ம. கண்ணப்பன் ஆகியோர் முறையே• 'கயிலைபாதி காளத்திபாதி அந்தாதி' 'அப்பர் தேவாரத்தில் கயிலைக் காட்சி' 'சுந்தரர் தேவாரத்தில் கயிலைக்காட்சி' பெரியபுராணத்தில் கயிலைக் காட்சி' 'திருக்கயிலாய ஞானஉலா' என்ற தலைப்புக்களில் விரிவுரையாற்றினர்கள். அன்பர்கள் பலர் கேட்டுப் பயன் பெற்றனர். இரவு வெள்ளிரதத்தில் திருக்கயிலாயத் திருவுருவப்படத் திருவீதியுலா திருமுறைப் பாராயணத்துடன் நிகழ்ந்தது. ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்களும் உடன் எழுந்தருளினர்கள். அன்பர்கள் பலர் திருவீதியுலாவில் கலந்துகொண்டு வழிபட்டுப் பயன்பெற்றனர்.

மாயூரம் – வள்ளலார்கோயிலில்

குருபெயர்ச்சி விழா

திருக்கயிலாய பரம்பரைத் தருமை ஆதீனத்துக்குச் சொந்தமான மாயூரம் - வள்ளலார்கோயில் ஸ்ரீ வதான்யேசுவரசுவாமி திருக்கோயிலில், 31—7—78 திங்கட்கிழமை காலை 11 மணிக்கு, குருபகவான் மிதுனராசியிலிருந்து கடகராசிக்குப் பிரவேசம் செய்ததை முன்னிட்டு அன்று ஸ்ரீ மேதா தட்சிணாமூர்த்திக்கு விசேஷ அபிஷேக அலங்கார ஆராதனைகள் நடைபெற்றன. குருபெயர்ச்சியை முன்னிட்டு 20—7—78 வியாழக்கிழமை முதல் தொடங்கி நடைபெற்றுவந்த லட்சார்ச்சனை பூர்த்தி விழாவும் அன்று நிகழ்ந்தன. ஆதீன ஓதுவா மூர்த்திகள் திருமுறைப் பாராயணம் செய்தனர். ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்கள் வழிபாட்டிற்கு எழுந்தருளித் தரிசனம்செய்து அன்பர்கட்கு அருட்பிரசாதம் வழங்கினர்கள். பத்தாவது குருமகா சந்நிதானம் அருளிய ஸ்ரீ தட்சிணாமூர்த்தி திருவருட்பா பாடல்களை வழிபாட்டின்போது ஓதுவாமூர்த்திகள் பாடினர். ஆதீன வேத சிவாகமபாடசாலை ஆசிரியர் திரு. K. கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகள் குருபெயர்ச்சியின் பயனையும் ஞானமுத்திரையின் தத்துவக்கருத்தையும் விளக்கிக்கூறினர்கள்.

தருமை ஸ்ரீ ஞானபுரீசுவரர் ஆலயத்திலும் ஸ்ரீ தருமபுரீசுவரர் ஆலயத்திலும் ஸ்ரீ தட்சிணாமூர்த்திக்கு விசேஷ அபிஷேக அலங்கார ஆராதனைகள் நடைபெற்றன திரு K. கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகள் ஸ்ரீ தட்சிணாமூர்த்தின் திருக்கோலக்காட்சியில் காணப்படும் சிறப்பினை விளக்கிச் சொற்பெருக்காற்றினார்கள்.

ஆடிப்பூர விழா

திருக்கயிலாயபரம்பரைத் தருமை ஆதீனத்துக்குச் சொந்தமான திருக்கடவூர் ஸ்ரீ அபிராமி அம்மைக்கும், சீகாழி ஸ்ரீ திருநிலைநாயகி அம்மைக்கும், வேளூர் ஸ்ரீ வாலாம்பிகை அம்மைக்கும் 29—7—78 முதல் ஆடிப்பூரத் திருவிழா நடைபெற்றது. 7—8—78 திங்கட் கிழமை ஆடிப்பூரத் திருநாளன்றும், ஆடிவெள்ளிக்கிழமை சிறப்பு வழிபாடுகளிலும் அன்பர்கள் கலந்துகொண்டு வழிபட்டு அம்மையின் அருள்பெற்று உய்ந்தனர்.

ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகள் குருபூஜை விழா

திருக்கயிலாயபரம்பரைத் தருமையாதீனம் ஸ்ரீ ஞானபுரீசுவர சுவாமி திருக்கோயிலில் ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகள் குருபூஜை விழா 10—8—78 வியாழக்கிழமை சிறப்பாக நடைபெற்றது. ஆதீனபூஜை மடம் சொக்கலிங்கபெருமான் சந்நிதியில் சுந்தரமூர்த்தி சுவாமிகள் புராணம் ஆதீனத்திருக்கூட்டத்து அடியார்களாலும் ஆதீன ஓதுவா மூர்த்திகளாலும் படிக்கப்பெற்றது. ஆலயத்தில் சுந்தரர் பெருமானுக்கு விசேஷ அலங்கார ஆராதனைகள் நடைபெற்றன. மாலை திரு. வி. சா. குருசாமி தேசிகர், எம்.ஏ., திரு. வி. சபேசன், திரு. மு. சிவச்சந்திரன் எம். ஏ., திரு. கா ம. கண்ணப்பன், திரு. மு. ஆறுமுக தேசிகர் ஆகியோர்கள் சுந்தரர் அற்புதச்சொற்பொழிவுகள் நிகழ்த்தினர். ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் வழிபாடாற்றி அனைவருக்கும் அருட் பிரசாதம் வழங்கினார்கள். பின்னர் சுந்தரர்பெருமான், சேரமான் பெருமாள் திருவீதியுலாக்காட்சி திருமுறைப்பாராயணத்துடன் நடை பெற்றது.

சென்னை, தருமையாதீன சமயப் பிரசார நிலையத்தில்

நாயன்மார்கள் குருபூஜைகள் :

ஸ்ரீ மாணிக்கவாசகர் குருபூஜை விழா 9—7—78 ஞாயிறு மாலை நிலைய மன்றத்தில் மதுரை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது. விழா ஆரம்பத்தில் திரு. V. N. ஆறுமுக முதலியார் அவர்கள் குமாரிகள் கடவுள் வணக்கம் பாடினார்கள்.

நிலைய சுவாமிகள் வரவேற்புரை கூறுகையில் ஆண்டவன் ஞான சம்பந்தருக்குப் பாலைக்கொடுத்தும், அப்பருக்குச் சூலைகொடுத்தும். சுந்தரருக்கு ஓலைகொடுத்தும் ஆட்கொண்டார். மணிவாசகருக்கு இறைவன் திருவடி சூட்டி ஞானோபதேசம்செய்து ஆட்கொண்டார். எனவே திருவாசகம் எல்லோரும் உபதேசம் பெற்று உய்யவேண்டும் என்கிற குறிப்பை உணர்த்துகிறது. இந்த மணிவாசகர் விழாவிற்கு மதுரை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் தலைமைதாங்குவது மிகப்பொருத்தம் என்று குறிப்பிட்டார்கள்.

அடுத்துப் பேசிய சொல்லின்செல்வர் திரு. சுகிசிவம் B. A., B. L., அவர்கள் எட்டாந்திருமுறை திருவாசகம். அதை ஓதினால் நெஞ்சு உருகவேண்டும். நெஞ்சு உருகவேண்டுமானால் காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கித் திருவாசகத்தை ஓதல்வேண்டும். முறையாகத் தீட்சை பெற்று ஓதினால் பயனை விரைவில் பெறலாம். 'நானேயோ தவம் செய்தேன்? என்ற கேள்விக்குறியை எழுப்பி, 'சிவாயநம' என உபதேசம் பெற்றேன்; அதனால் பரம்பொருள் எனது உள்ளத்தில் தானே வந்து புகுந்து அருள் செய்து மேலுலக வாழ்வை அளித்தான்'' என்று மணிவாசகர் கூறுகிறார்; எனவே சைவ சமயம் திருவருளைப்பெறக் குருவருளைப்பெறவேண்டும் என்று உணர்த்துகிறது என்று கூறினர்.

தலைமை வகித்த மதுரை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள், சிவஞானபோதம் எட்டாம் சூத்திரம்,

'' ஐம்புல வேடரின் அயர்ந்தனை வளர்ந்தெனத்
தம் முதல் குருவுமாய்த் தவத்தினில் உணர்த்த விட்(டு)
அன்னிய மின்மையின் அரன்கழல் செலுமே''

என்று கூறுகிறது. இதற்கு இலக்கியமாக உள்ளது எட்டாந்திருமுறை திருவாசகமாகும். ஆண்டவன் பக்குவமடைந்த உயிர்களுக்குக் குருவாக எழுந்தருளித் திருவடி சூட்டி ஞானஉபதேசம் செய்து பெருவாழ்வு அளிக்கிறார். இந்த உண்மையை உணர்ந்து உயிர்கள் உயர்வடைய வேண்டும் என்று கூறினர்கள். மேலும், இறந்தவர்கள் ஆவியின் பேச்சையும் உருவத்தையும் மேல்நாட்டில் இன்று டேப் செய்து படமெடுக்கிறார்கள். இறந்தவர்கள் இவ்வுலகில் நடப்பதறிந்து வேண்டியவர்களுக்கு அறிவுகொடுத்துத்திருத்துகிறார்கள். கண்காணிக்கிறார்கள் இதை அறிந்தால் எல்லோரும் பழிபாவங்களுக்கு அஞ்சி நல்லவற்றையே செய்வார்கள். நல்லவற்றையே நினைப்பார்கள். திருவருள் நாட்டம் ஏற்படும். ஆதலால் மதுரை ஆதீனத்தால் வெளியீடு செய்யப்பட்ட நூல்களையெல்லாம் படித்துப் பயனடைய வேண்டும் என்று ஆசியருளினார்கள்.

விழாவில் "அழுது அடி அடைந்த அன்பர்" என்ற தலைப்பில் பேசிய திரு. சிதாபதி "அழுதால் உன்னைப் பெறலாமே" என்பது திருவாசகம். அன்பு முதிர்ச்சியினுல்தான் அழுகைவரும். மனம் ஒன்றியிருந்து நினைக்கமுடியும்; இந்த இரண்டு பண்புகளால் ஆண்டவன் அருளைப்பெறமுடியும் என்ற குறிப்பை உணர்த்து கிறது என்று கூறினர். மேலும் 'அரிசினத்தால் ஈன்றதாய் அகற் றிடினும் மற்றவள் அருள் நினைந்து அழும் குழவி' போன்றேனே" என்று ஆழ்வார் அருளிச் செய்தபடி ஒவ்வொருவரும் அவன் அருள் நினைந்து அன்பால் அரற்றி அலறவேண்டும் என்று கூறினர்.

பிரசங்க பூஷணம் குமாரி R. கௌரி மணிவாசகர் வரலாற்றை இன்னிசைச் சொற்பொழிவாகச் செய்து எல்லோரையும் மகிழச் செய்தார்.

அமரர் நீதி நாயனுர் குருபூஜை 10—7—78 தேதியிலும், மூர்த்தி நாயனுர், புகழ்ச்சோழர் இவர்கள் குருபூஜை 29—7—78 தேதியிலும் நிலயபூஜை மடத்தில் நடைபெற்றது. திரு. V. N. ஆறுமுகமுதலியார் பெரியபுராணம் வாசித்து விளக்கம் செய்தார்கள். ஸ்ரீ அப்பர் குருகுல மாணவர்களும் நிலயஅன்பர்களும் சிலரும் கேட்டுப்பயனடைந்தனர். எல்லோருக்கும் பிரசாதம் வழங்கப்பட்டது.

கிருத்திகைப் பிரசாதம் வழங்கும் விழாக்கள்

இவ்விழாக்கள் 2—7—78, 30—7—78 ஆகிய நாட்களில் நடைபெற்றது. 2—7—78 நடைபெற்றவிழாவிற்கு திரு. S. நடராஜன் (நஜன்) அவர்கள் தலைமைவகித்தார்கள். ஸ்ரீ செல்வமுத்துக்குமார சுவாமி படத்திற்கு அர்ச்சனை செய்தபிறகு திரு P. A. S. ராஜசேகரனும் திரு. P. A. குப்புசாமி முதலியாரும் வேளூர்ப் பதிகங்களைப் பாடினர்.

நிலய சுவாமிகள் வரவேற்புரை கூறுகையில் திரு நஜன் அவர்களை அறிமுகப்படுத்தி, புத்தகங்கள்மூலம் அவர் செய்துவரும் சமயத்தொண்டைப் பாராட்டிப் பேசினர்கள். திரு. நஜன் எழுதிய "முருக தரிசனம்" என்ற நூலின் இரண்டாது பதிப்பை வெளி யிட்டார்கள்.

திரு நஜன் அவர்கள் தனது தலைமையுரையில் கூறியதின் சுருக்கமாவது: "முருகப்பிரானின் பிரசாதம் இங்கு வழங்கப்பட விருக்கிறது. பிரசாதம் என்று சொல்லுகிருேமே, அதன் அர்த்தம் என்ன? ஏற்கனவே அருள் நிறைந்து அமோகமாக இருப்பது பிறரிடம் வருகிறது. இப்படி வருவதால் ஏற்கனவே இருப்பது எவ்விதத்திலும் குறைவுபடுவதில்லை. இதைத்தான் "ப்ர" என்ற வார்த்தை குறிக்கிறது. கற்று, கேட்டு, தெளிந்து அமோகமாக உள்ள

ஞானம் விரிவுரையாக வெளிப்படுவது "ப்ரவசனம்". ஒருவிளக்கி லிருந்துமற்றொரு விளக்கு ஏற்றப்படுவது "ப்ரதீபம்". இதனால் முதல் விளக்கின் தீபம் குறைவதில்லை. அருளைச் சாதிக்கும் (சாதம்) ஒரு சின்னம் (விபூதி, தீர்த்தம், துளசி ஆகியவை) இறைவனின் வற்றாத அருள் நிதியிலிருந்து வழங்கப்படுவதால் 'பிரசாதம்' எனப்படுகிறது. இதை வாங்கிக் கொள்பவர்களுக்கும் அருள் கிடைக்கிறது. மூலநிதி யான இறைவன் அருள் இப்படி வழங்கப்படுவதால் குறைபடுவது இல்லை. "நம: பார்வதி பதயே" என்று சொன்னவுடன் எல்லோரும் "ஹர ஹர மகாதேவா" என்று ஒருமுறை சொல்லுகிறார்கள். "ஸர்வத்ர கோவிந்தநாம சங்கீர்த்தனம்" என்றவுடன் எல்லோரும் "கோவிந்தா கோவிந்தா" என்று இருமுறை கோவிந்த நாமத்தைச் சொல்லுவர். "நிக்ருஷ்வைரஸமாயுதை: காலைர்ஹரித்வமாபண்ணை:" என்ற வேதவாக்யம்முடிந்ததும் 'சுப்பிரமண்யோம், சுப்பிரமண்யோம், சுப்பிரமண்யோம்" என்று மும்முறை சொல்லப்படுகிறது. இது ஏன்? பரமசிவம் சம்ஹார கர்த்தா. ஒருதடவை அவர்பெயரைச் சொன்னால் போதும். வாழ்வில் எல்லாவற்றையும் அனுபவித்து விட்டு இனி இறைவனடி சேரவேண்டியது ஒன்று தான் பாக்கி. ஒரே தடவை "ஹர ஹர மகாதேவா" என்று சொன்னாலே போதும். அந்த ஒரு தடவை சொன்னதற்கே மறு ஜன்மம் கிடையாது. விஷ்ணு காக்கும் கடவுள். ஜனனமாகி உயிர் இருந்தால்தானே அவர் காப்பாற்ற முடியும். ஆகவே முதல் 'கோவிந்தா' சொல்வதால் எனக்கு நல்ல ஜன்மம் கொடு என்று பிரார்த்திப்பது. மற்றொரு "கோவிந்தா" வால் அந்த வாழ்க்கையில் என்னைக் காப்பாற்று என்று கோருவது. 'சுப்பிரமண்யம்' என்பது பிரம்மண்யத்தை அதாவது ஞானத்தைத் தரும் சக்தி. அதனால்தான் முருகன் குருவாகவும் விளங்குகிறார். நல்ல ஜென்மாவைக்கொடு (முருகன் பிரும்மாவிடமிருந்து சிருஷ்டித் தொழிலையும் மேற்கொண்டவர்) நல்ல ஞானத்தைக்கொடு (அவரே குருவாகத் தந்தைக்கு உபதேசித்தவர்). முத்தியைக்கொடு (சிவனும் முருகனும் வெவ்வேறு அல்ல.) ஆகவே முருகனே சம்ஹார மூர்த்தி யாகவும் இருப்பவர் வேதங்களில் சிவபெருமானைக் குறித்து ருத்ரம் என்ற சக்தி வாய்ந்த தோத்திரம் இருக்கிறது. விஷ்ணுவைப் போற்றும் புருஷஸூக்தம் இருக்கிறது. 'வேதாகமேதம் புருஷம் மகாந்தம்' என்பதால் உலகில் புருஷோத்தமனை உன்னை நான் அறிவேன் என்று வேதமாதா கூறுகிறாள். அதனால் சுப்ரமண்யத்தைப் பற்றி அவன் பெருமைகளைப்பேச வேதமாதாவினால்கூட முடியவில்லை. சுப்பிரமண்யோம் என்று மும்முறைகூறி அஞ்சலி செலுத்துகிறாள்.

எக்கலைக்கும் பூதங்கள் எவற்றினுக்கும் பிரமனுக்கும்
தக்கமுதல் பரப்பிரும்மம் சதாசிவனேம் எனவேதம்சாற்றுமல்லாமல்
முக்கனல்சூழ் வேள்வியிற் சுப்பிரமணியனேம் என முக்கால்கூறும்

என்கிறது காஞ்சி புராணம்.

முருகன் என்றாலே அழகன் என்று அர்த்தம். அழகுள்ள இடங்களில் எல்லாம் அவன் இருக்கிறான். பாமர மக்களின் மனத்தில் நிலையான இடம் பெற்றிருக்கிறான். புருவ மத்தியில் (ஆக்ஞை ஸ்தானம்) ஆறுபட்டை மணியாக விளங்குகிறான். அகக்கண் உள்ள இடம் அது. ஆகவே அவனை எங்கும் தேடிக்கொண்டு போக வேண்டியதில்லை".

பண் ஆராய்ச்சிக்காக அமெரிக்காவில் குடியேறியுள்ள தமிழ் நாட்டுப் பெண் திருமதி இந்திரா பேசுகையில் அமெரிக்காவில் தேவாரம், திருவாசகம் போன்ற திருமுறைகளைப் பற்றி அறியவும் பாடவும் அங்குள்ள மக்கள் பேரார்வம் காட்டுவதாகவும் குறிப்பிட்டார்கள்.

30-7-78 தேதிநடைபெற்ற விழாவிற்கு திரு. த. பெரியாண்டவன் எம். ஏ. அவர்கள் (அலுவலர், தமிழ் வளர்ச்சி இயக்கம், சென்னை) தலைமை வகித்தார்கள். ஸ்ரீ செல்வமுத்துக்குமார சுவாமி படத்திற்கு அர்ச்சனை செய்தபிறகு நிலைய ஓதுவார் திரு. P. A. குப்புசாமி முதலியாரும், திரு. சின்னமணியும் வேளூர்த் திருப்பதிகங்களைப் பாடினார்கள்.

திரு. பெரியாண்டவன் "கை கால்களின் துணையால் மரம் ஏறிக் கிளையிலுள்ள தேன் கூட்டைக் கண்ணால் கண்டு எடுக்கவல்ல ஆற்றலுள்ளவர்களுக்குக் கிடைக்காத தேன், கை கால் முடங்கியுள்ள, கண் பார்வையற்றுள்ள, ஒருவனின் நாவில் சொட்டுவதைப் போல், உலகைப் படைத்த நான்முகனும் அவ்வுலகை அளந்த திருமாலும் இறைவனைத்தேடி அலைய, தாமே விரும்பிவந்து தன் கையில் சிவ பெருமான் அமர்ந்துள்ளான் என்று கூறியுள்ளார் சிவப்பிரகாச சுவாமிகள். அப்படி இறைவன் முருகப்பெருமானும் அவனை ஈன்ற ஆதிசக்தியாம் அன்னையும் நம்மை வலியவந்து ஆட்கொண்ட காரணத்தால் தான் நாம் அனைவரும் நம்மைமறந்து அடிகளாரின் முன்னிலையில் கூடியுள்ளோம்.

மேட்டூர் நீர்தேக்கத்திலிருந்தோ அல்லது நெய்வேலியிலிருந்தோ பெரிய பெரிய கம்பிகளின் வாயிலாக வருகின்ற மின்சாரத்தை நேரடியாக நாம் பயன் படுத்தத் தொடங்கினால் ஊரே பற்றி எரியத் தொடங்கி விடும். அத்தகு பெரியசக்தியை மின்னியல் விசை மாற்றமைவு (Transformer) வேண்டிய அளவு குறைந்த சக்தியாக்கிப் பயன் படுத்திக்கொள்ளத் துணை நிற்கிறது. இது போலவே தவத்திரு அடிகளாரைப் போன்றவர்கள் இறைவனிடம் நம்மை ஆற்றுப்படுத்தி அவனருள்பெறத் துணை நிற்கின்றனர். இறையாற்றலும், நிறைமதி நேரத்தில் பொங்கும் கடல் போலும், கடலில் சிலவிடங்களில் உள்ள

நீர்ச்சுழல் போன்றும் சிலநேரங்களில் சில இடங்களில் வெளிப் படுகிறது. இத்தகு ஆற்றல் மதுராந்தகம் வட்டத்தில் உள்ள மேல் மருவத்தூரில் ஆதிபராசக்தியாக சுயம்பு வடிவில் வெளிப்பட்டுள்ளது. பொதுவாக லிங்கமே சுயம்பு வடிவில் தோன்றும் என்பர். ஆனால் இங்கு அன்னை சுயம்பு வடிவில் தோன்றியுள்ளாள். இந்தப் பகுதியில் பன்னூறு ஆண்டு காலமாக வளர்ந்திருந்த வேப்பமரத்தி லிருந்து பால்வடியத் தொடங்கியது. அப்பால் சுவையாக இருந்ததால் பல்லாயிரம் மக்களால் சுவைக்கப் பெற்றது. 1966-ம் ஆண்டு செங்கை மாவட்டத்தைத் தாக்கிய புயல் இம்மரத்தைச் சாய்த்து விட்டது. இந்தமரம் சாய்ந்தபின் இம்மரத்தின் வேரின் கீழிருந்து அன்னை சுயம்புவாகத் தோன்றி அவனியை ஆட்கொண்டுள்ளாள். இவ்வாலயத்தில் அருள்மிகு பங்காரு அடிகளார் அவர்களை அன்னை ஆட்கொண்டு அவர்வாயிலாக மக்களுக்கு அருள்வாக்கு அளித்து வருகிறாள். அவர் கூறும் தத்துவக் கருத்துக்களைக் கேட்டு காஞ்சி புரம் திருமிகு. வஜ்ஜிரவேலு முதலியார் அவர்களும், திருமிகு. பேராசிரியர் தெ. பொ. மீனாட்சிசுந்தரம் அவர்களும், பேராசிரியர் அ. ச. ஞானசம்பந்தம் அவர்களும் வியந்து பாராட்டியுள்ளார்.

யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம், என்ற அடிப்படையில் நீங்கள் அனைவரும் அத்திருக்கோயிலுக்குச் சென்று வரவேண்டும். அன்றியும் கூட்டு வழிபாட்டின் வாயிலாகத்தான் மேலோர், கீழோர் என்ற பாகுபாட்டை நீக்கி ஒன்றி இருந்து நினைக்கும் உயர்நிலை எய்த முடியும். அத்தகு கூட்டு வழிபாட்டை நாம் ஒழுங்காக நடத்த வேண்டும். இராமகிருஷ்ணபரமஹம்சர், விவேகாநந்தர் காட்டிய நெறிகளில் நின்று அன்னையையும் ஐயனையும் அடைய முயலல் வேண்டும்.

ஓரிடத்திலிருந்து இன்னோரிடத்திற்கு வாழ்த்துத்தந்தி அனுப்பும் இவ்வறிவுலக காலத்தில் புள்ளிருக்குவேளூரிலிருந்து வந்திருக்கும் இறைவனது வாழ்த்துக்களைப் பிரசாதங்களின்வாயிலாகப் பெற்று உய்வோமாக என்று தமது தலைமை யுரையை நிகழ்த்தினார்கள்.

தமிழ் வகுப்புகள் துவக்க விழா

10—7—78 தேதி மாலை நிலையத்தில் தமிழ் வித்துவான் மற்றும் பி. லிட். இலவச மாலைநேர வகுப்புகள் புலவரேறு திரு. N. R. முருக வேள் அவர்களால் துவக்கி வைக்கப்பட்டது. விழாவிற்கு அறநிலை யத்துறை முன்னாள் ஆணையர் திரு M. S. சாரங்கபாணி முதலியார் அவர்கள் தலைமை வகித்தார்கள். திரு. G. M. முத்துசாமி பிள்ளை அவர்களும், திரு. A. J. இராமசாமி முதலியார் அவர்களும் உரை நிகழ்த்தி மாணவர்கள் வகுப்புகளில் சேர ஊக்கமளித்தார்கள்.

எதிர்காலம்

ஜோதிஷம், திரு. ந. இராசமாணிக்கம்
ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் நடுநிலைப்பள்ளி, திருப்பனந்தாள்.

(காளயுக்திஸூ ஆவணிமீ 1உ முதல் 31உ முடிய)
(17—8—78 முதல் 16—9—78 முடிய)

ஸ்ரீ காளயுக்திஸூ ஆவணிமீ 1உ குருவாரம் திருவோண நக்ஷத்திரம் சௌபாக்கிய யோகம் வணிசைகரணம் கூடிய காலத்தில் உதயம் முதல் 6 நாழிகை 2 விநாடிக்குக் கன்னியா லக்கினத்தில் ஸ்ரீ லோகரட்சகரான சூரியபகவான் கடகராசியிலிருந்து சிம்மராசி சங்கிரமணமாக ஆவணிமாதப் பிரவேசம் செய்கின்றார். சங்கிரம வாராதிபதி குருபகவான் சேனதிபதியாகிறர். அதன்பலன் லோகத்தில் ஆங்காங்கு நல்ல மழை பொழிந்து நிலவளம் நீர்வளம் மிகுந்து உணவுப் பயிர்களின் உற்பத்தி மிகவும் அதிகரிக்கும். தேசத்தில் அத்தியாவசியப் பொருள்களின் விலைவாசி மலிந்து பிரஜைகள் தாராளமாகக் கிடைக்கப்பெற்று உய்வார்கள். லோக நாடுகளில் அரசர்கள் ஜனதிபதிகள் நன்ருக ஆட்சிசெய்து பிரஜைகளின் அன்பைப்பெறுவர். ஜனப்பிரதிநிதியானவர்கள் அரசு அலுவலர்கள் சட்டம், அமைதி, பாதுகாப்பு, பராமரிப்பு சேவைகளில் நெறியுடன் செயல்படுவர். தேசங்களில் ஆங்காங்கு ஆன்ருேர்களால் பொதுநல கைங்கர்யங்கள் தெய்வகைங்கர்யங்கள் ஆகிய புண்ணிய காரியங்கள் நடைபெற்றுவரும்.

உலகெங்கும் உள்ள திருமடங்கள் ஆசாரிய பீடங்கள் பூர்வ ஜென்ம தவமேன்மையினுல் இப்பூமியில் தொடர்ந்து சிவத்தொண்டாற்றுகின்ற பாக்கியத்துடன் பிரகாசிக்கின்ற ஞான குருமகான்கள் லோகத்துக்கு இயம்புகின்ற நல்வழியில் இவ்வுலகம் இயங்கும். தேவாலயங்களில் தெய்வ ஆராதனைகள் உத்ஸவங்கள் சிறப்பாக நடைபெற்றுவரும். சகல பிரஜைகளும் மனவாக்குச் சுத்தத்துடன் நற்செயல்புரிந்து சகல சம்பத்துக்களையும் பெற்றுய்வார்கள்.

சந்திரகிரஹணம்

குறிப்பு:- காளயுக்திஸூ ஆவணிமீ 31உ (16-9-78) ஸ்திரவாரம் பௌர்ணமி பூரட்டாதி நட்சத்திரம் 3, 4 பாதங்களில் சம்பவிக்கும் கேதுகிரஸ்த கபிலவர்ண சோமோபராக புண்யகாலம் தாத்ருபர்வா எங்கும் இந்திய ஸ்டாண்டர்டு மணிப்படி :

ஸ்பர்சம்	இரவு	மணி	10—50,
நிமீலனம்	,,	,,	11—54,
மத்தியம்	,,	,,	12—34,
உன்மீலனம்	,,	,,	1—14,
மோக்ஷம்	,,	,,	2—18.

பரிமாணம்வீசம் 21¼ சந்திரமண்டல உத்திர துருவாபிமுக நேமியிலிருந்து கிழக்கே 89 டிகிரியில் ஸ்பர்சம். மேற்கே 124 டிகிரியில் மோக்ஷம். அன்று பிற்பகல் முதல் போஜனம் கூடாது. பூர்ணிமா சிரார்த்தம் மறு நாள் செய்தல்வேண்டும்.

அவிட்டம் பின் ½, சதயம், பூரட்டாதி, உத்திரட்டாதி, ரேவதி, புனர்பூசம், விசாக நக்ஷத்திரங்களில் பிறந்தவர்கள் சாந்திசெய்து கொள்க.

1. மேஷம் :- அசுவதி - பரணி - கார்த்திகை ¼
(சு. சே. சோ. லா. - லி. லு. லே. லோ. - அ.)

மேஷராசி 9 பாதங்களும் மிச்சிர பலனுக நடக்கும். குடும்பாபி விருத்தியில் பண வருமானங்களில் நல்ல நிலைமையாக இருந்து வரும். சகோதரருக்கு நலம்பல ஏற்படும். பூமி இயந்திரங்களில் விருத்திபலன் ஏற்படும். எழுத்துமூலிய காரியங்களில் துரிதநிலைமையாக இருந்துவரும். தெய்வானுக்கிரகத்தினுல் எல்லாக்காரியங்களும் இலகுவில் சாதகமாகும். ஞாயிற்றுக்கிழமை சூரியார்ச்சனை செய்ய அஜீர்ணம் வயிற்றில் வாயுபோன்ற நலிவுநீங்குவதாகிச் சுகம்தரும். வியாஜ்ஜிய வழக்குகளில் ஜெயம் ஏற்படும். தார புத்திரர்களுக்குச் சௌக்கியம் தரும். செய்தொழிலில் காரிய சாதனை ஏற்படும். வியாழன் வெள்ளி சுபமாகும்.

2. ரிஷபம் :- கார்த்திகை ¾ - உரோகிணி - மிருகசீர்ஷம் ½
(இ. ஊ. ஏ. - ஒ. வ. வி வு - வே. வோ.)

ரிஷபராசி 9 பாதங்களும் குடும்பாபி விருத்தியில் நல்ல சௌகர்யங்களையும் பணவருமானங்களையும் ஏற்படுத்தி வரும். சகோதரருக்கு நலம்தரும். வித்துவத்துவம் கலைத்துறையில் நன்மையும் மதிப்பும் ஏற்பட்டுக்கொண்டிருக்கும். விவசாயத்தில் சாதாரண பலனுக இருந்துவரும். புத்திரர் சம்பந்தமாக உள்ள சஞ்சலம் நீங்கும். மாதப் பின்பகுதில் தாம்பத்தியவாழ்வில் பிணக்குகளின்றி ஒற்றுமை நிலவும். சாதாரணமாக உள்ள மனக்குழப்பங்கள் நீங்குவதாகி நிம்மதி அளிக்கும். செய்தொழிலில் நற்பலன் வந்துசேரும். சனி ஞாயிறு சுபமாகும்.

3. மிதுனம் :- மிருகசீர்ஷம் ½ - திருவாதிரை – புனர்பூசம் ¾

(கா. கி. - கு. க. ங. ச்சா. - கே. கோ, ஹ.)

மிதுன ராசி 9 பாதங்களும் சுபபலன் தரும். குடும்பத்தில் தன வருமானங்கள் உயர்கிரியைகளிலும் பெண்வழியிலும் பெருமதிப்பாக வந்துகொண்டிருக்கும். வித்துவத்துவத்தில் சிறப்பு தரும். இளைய சகோதரருக்குச் சுபம் ஏற்படும். எழுத்துமூல்ய காரியங்கள் அவ்வப் போது பூர்த்தியாகும். பூமி இயந்திரங்களில் செலவுடன் விருத்தி பலன் ஏற்படும். பெற்ளேர் தார புத்திரர்களின் சௌக்கியம் நன்ருக இருந்துவரும். செய்தொழிலில் பிரபலம் ஏற்படும். திங்கள் செவ்வாய் சுபமாகும்.

4. கடகம் :- புனர்பூசம் ¼ – பூசம் – ஆயில்யம்.

(ஹி. - ஹு. ஹே. ஹோ. ட. - டி. டு. டே. டோ.)

கடகராசி 9 பாதங்களும் சுபபலன் தரும். குடும்பாபிவிருத்தியில் பணவருமானங்கள் கணிசமான வரவாகிக்கொண்டிருக்கும். மனோ தைரியபோக்கில் எல்லாக் காரியங்களும் வெற்றிகரமாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கும். சுகானுபவங்கள் மேலாக இருந்துவரும். 15உ முதல் கட்டிடப்பிராப்தி கால்நடை வாகனப் பிராப்திகளில் விருத்திபலனை ஏற்படுத்தும். பூபாக்கியம் பெருகும். இயந்திர சாதனங்களில் நற் பலன் வந்துசேரும். செய்தொழிலில் பிரசித்தம் ஏற்படும். புதன் வியாழன் சுபமாகும்.

5. சிம்மம் :- மகம் - பூரம் – உத்திரம் ¼

(ம. மி. மு. மே. - மோ. ட. டி. டு. - டே.)

சிம்மராசி 9 பாதங்களும் மிச்சிரபலனை நடக்கும். குடும்பாபி விருத்தியில் பணவரவு செலவுகள் சரிசமமாக இருந்துவரும். அவசர வார்த்தைளினல் சிறு பூசல்கள் வந்து சரிபடும். சகோதரருக்கு 15உ க்கு மேல் ஓர் நன்மையுண்டாகும். இராசிக்கு உஷ்ணதிக்கம் இருமல் போன்ற நலிவு ஏற்பட்டு உடன் குணமாகும். வித்துவத்துவம் கலைத் துறையில் முன்னேற்றமாக இருந்துவரும். வியாஜ்ஜிய வழக்குகளில் மாதக்கடைசியில் ஜெயம் தரும். தார புத்திரர்களின் சௌக்கியம் நன்ருக இருந்துவரும். செய்தொழிலில் 15உ முதல் முன்னேற்றமான நிலைமையும், இலகுவாக காரிய சாதனைகளையும் ஏற்படுத்தும். வெள்ளி சனி சுபமாகும்.

6. கன்னி :- உத்திரம் ¾ - ஹஸ்தம் - சித்திரை ½

(டோ. பா. பி. - பு. ஷ. ண. ட. - பே. போ.)

கன்னியாராசி 9 பாதங்களும் மிச்சிரபலனை நடக்கும். குடும்பாபி விருத்தியில் 15உ முதல் பணச் செலாவணி சரளமாக இருந்துவரும்.

சகோதரர் நலம் சாதாரணமாக இருந்துவரும். பந்து அம்மான்கள் விசுவாசப்பான்மையில் இருந்துவருவர். வித்துவத்வம் கலைத்துறையில் பிரசித்தமும் உயர்வும் ஏற்படும். வாகனசௌக்கியம் இருப்பிட சௌக்கியம் திருப்தியளிக்கும். புத்திர நலனில் மிதமிஞ்சிய செலவாக இருப்பினும் அனுகூலமான நன்மைகளை ஏற்படுத்திவரும் தாம்பத்திய வாழ்வில் அன்யோன்யம் நிலவும். செய்தொழில் பிரபலமாக நடந்துகொண்டிருக்கும் ஞாயிறு திங்கள் சுபமாகும்.

7. துலாம் :– சித்திரை ½ – சுவாதி – விசாகம் ¾

(ர. ரி. - ரு. ரே. ரோ. தா. - தி. து. தே.)

துலாராசி 9 பாதங்களும் மிச்சிரபலனை நடந்துவரும். குடும்பாபி விருத்தியில் பணவருமானங்கள் வந்துகொண்டிருக்கும். சகோதரம் மனைவி நலனில் அவசிய செலவுகளும் ஏற்படும். பூர்வ சொத்தில் இருந்து நற்பலன் வந்துசேரும். ஓர் பரிவர்த்தனையும் ஏற்படும். குலதெய்வத்துக்குப் பூசைபோட குடும்பசுபிட்சம் மேலோங்கும். 15உ முதல் சால்நடை ஜீவன் பிராப்தியில் வாகனாதிகளில் நல்ல சௌகரியங்களை ஏற்படுத்தும். தார புத்திரர்களுக்குச் சௌக்கியம்தரும். செய்தொழிலில் கீர்த்தியும், உயர்வும் ஏற்படும். புதன் வியாழன் சுபமாகும்.

8. விருச்சிகம் :– விசாகம் ¼ அனுஷம் – கேட்டை.

(தோ. - ந. நி. நு. நே. - நோ. ய. யி. யு.)

விருச்சிகராசி 9 பாதங்களும் சுப பலன் தரும். குடும்பாபிவிருத்தியில் பணவருமானங்கள் பெருமதிப்பாக வந்துகொண்டிருக்கும். வெகுநாள் முயற்சித்த காரியங்கள் நிறைவேறும். சகோதரருக்கு 15உ க்கு மேல் நற்பாக்கியம் வந்துசேரும். சொந்த ஸ்திரி சுகம், வாசனாதி கந்த புஷ்ப நுகர்வு ஆகிய இன்பங்களை அளிக்கும். வித்தியா வியாபாராதிகளில் பிரபல ஸ்திதியாக இருந்துவரும். வழக்கு விவகாரம் ஜெயமாகும். செய்தொழிலில் அலுவல்கள் துரிதமாக செயல்பட்டு வரும். வியாழன் வெள்ளி சுபமாகும்.

9. தனுசு :– மூலம் – பூராடம் – உத்திராடம் ¼

(யே. யோ. பா. பி. - பு. த. ப. ட. - பே.)

தனுர்ராசி 9 பாதங்களும் மிச்சிரபலனை நடக்கும். குடும்பாபி விருத்தியில் மாதத்தின் முன்பகுதியைவிடப் பின்பகுதியில் நல்ல வருமானங்கள் வந்துகொண்டிருக்கும். சகோதரர் சகோதரிகளின் நலம் நன்றாக இருந்துவரும். வித்துவத்துவம் கலைத்தொழில்துறைகளில் நற்பலனை அளித்துவரும். 15உ க்குமேல் ஓர் வாகனம்

வாங்குதல் ஆகும். பூமி இயந்திரங்களில் விவசாயத்தில் 25உ அளவில் திருப்திகரமான நிலையை ஏற்படுத்தும். மனைவிக்குச் சிரோ பாதை அல்லது மயக்கநலிவு ஏற்பட்டுக் குணமாகும். செய்தொழிலில் அலைச்சலுடன் காரிய சாதனை ஏற்படும். சனி ஞாயிறு சுபமாகும்.

10. மகரம் :– உத்திராடம் $\frac{3}{4}$ – திருவோணம் –அவிட்டம் $\frac{1}{2}$

(போ. ஜ. ஜி. - கி. கு. கே. கோ. - கா. கி.)

மகரராசி 9 பாதங்களும் சுமார் பலனுகவே நடக்கும். குடும்பாபி விருத்தியில் பணவருமானங்கள் சீராக இருந்துவரும். சகோதரருக்குச் சௌக்கிய பலனைத்தரும். வித்துவத்துவம் வைத்தியம் சித்திரக்கலையில் 15உ அளவில் கணிசமான தொகை கைக்குவரும். பிரபு நேசம் ஏற்படும். இயந்திர வாகனுதிகளில் சிலாக்கியபலன் இராது. புத்திரர் சௌக்கியம் தாரசௌக்கியம் நன்ருக இருந்துவரும். செய் தொழிலில் மாதப்பின்பகுதியில் முன்னேற்றம் காணும். திங்கள் செவ்வாய் சுபமாகும்.

11. கும்பம் :– அவிட்டம் $\frac{1}{2}$ – சதயம் பூரட்டாதி $\frac{3}{4}$

(கு, கே. - கோ. ஸ. ஸி. ஸு. - ஸே. ஸோ. தா.)

கும்பராசி 9 பாதங்களும் மிச்சிரபலனுக நடக்கும். குடும்பாபி விருத்தியில் பண வகை லேவாதேவிகளில் நல்ல ஆதாயங்களைக் கொடுக்கும். சகோதரருக்கு உடலில் அரிப்புபோன்ற நலிவு ஏற்பட்டுக் குணமாகும். கால்நடை ஜீவனில் வாகனுதிகளில் 15உ முதல் விருத்திகரமான நிலைமையையும் சௌகரியங்களையும் ஏற்படுத்தும். புத்திரர்களின் கல்வி, தொழில் துறைகளில் முன்னேற்றம் ஏற்படும். சிலசமயங்களில் வில்லங்கமான நிலைமையும் போக்கு வரவில் ஓர் விபத்தும் சம்பவிக்கும். ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமிக்கு அருச்சனை செய்ய அதனின்று விடுவிக்கும். தாம்பத்திய வாழ்க்கை சாதாரணமாக இருந்துவரும். செய்தொழிலில் உள்ள குழப்பநிலைமை நீங்கும். புதன் வியாழன் சுபமாகும்.

12. மீனம் :– பூரட்டாதி $\frac{1}{4}$ – உத்திரட்டாதி – ரேவதி.

(தி. - து. ஸ. ச. தா. - தே. தோ. ச. சி.)

மீனராசி 9 பாதங்களும் சுப பலன் தரும். குடும்பாபிவிருத்தியில் பொருள் வரவுகள் கண்யநிலைமைக்கு ஏற்ப வந்துகொண்டிருக்கும். சகோதரர்களின் நலம் நன்ருகஇருந்துவரும். 15உ அளவில் கால்நடை ஜீவன்களில் நற்பலன் தரும். வாசஸ்தலத்தில் நல்ல சௌகரியங்களை

உண்டுபண்ணும். வித்துவத்துவம் கலைத்துறையில் மேன்மைஸ்திதியை உண்டுபண்ணும். அரசாங்கத்தில் புகழும் வெகுமதியடைதலும் ஆகும். புத்திரர் பௌத்திரர்களின் சௌக்கியம் நன்முக இருந்துவரும். மனைவிக்குத் தேகாரோக்கியம் தரும். செய்தொழிலில் மேன்மேலும் விருத்திகரமான நிலைமையை ஏற்படுத்தும். சனி ஞாயிறு சுபமாகும்.

அன்னை அருள்மாலை

திருமுறைக் கலாநிதி

வேலூர், திரு. க. சொக்கலிங்க ஓதுவார்.

நல்லோர் தொழுந்திரு நல்லம்உறை மங்கள
நாயகி கோழம்பமே
நாளும்அருள் நல்கிடும் சௌந்தர நாயகி
நல்லதிரு ஆவடுதுறை
பொல்லாத வினையகற் றிடும்ஒப்பி லாமுலை
போற்றுந் திருத்துருத்திப்
பொன்னுரும் முகிழாம் பிகைதிரு வழுந்தூர்
புகுசௌந் தராம்பிகை
கல்லால் நிழற்கடவுள் காணுமயி லாடுதுறைக்
காத்திடு அபயாம்பிகை
கவினுற்ற விளநகர் வேயுறு தோளியுமை
காதல்கொள் திருப்பறியலூர்
பல்லோரும் வந்துபணி யும்இளங் கொடியம்மை
பண்ணிலுறு பெண்ணமுதமே.
பன்சின்மெல் லடியிணையைத் தஞ்சம்அடைந் தென்றும்
பணிவேற் கருள் அன்னையே. (12)